# திருமறைத்தீபம்

BIBLE LAMP

மலர் 5 ஜனவரி – மார்ச் 1999 இதழ் 1



ஜோன் பனியன்

திருமறைத்தீபம்

Issue No.1 of 1999

ISBN 1173-7255

காலாண்டுக்கொருமுறை வெளிவரும் திருமறைத்தீபம் சவரின் கிறேஸ் வெளியீடுகளினால் வெளியிடப்படுகின்றது. வேதசத்தியங்களை எடுத்துரைத்து கிருபையின் தேவனை மகிமைப்படுத்துவதே பத்திரிகையின் தலையாய நோக்கம்.

பத்திரிகையின் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக்கூடாது.

வருட சந்தா: நியூ. $16.00

**ஆசிரியர்: ஆர். பாலா**
**Editor:** R. Bala
**Publishers:** Sovereign Grace Publications
**Address:** Bible Lamp
P. O. Box 62 159
Sylvia Park
Auckland 1006
New Zealand
**Telphone:** 64 9 272 8061
**Fax:** 64 9 272 8032
**email:** bala@ihug.co.nz
**Web site:** www.biblelamp.org

**கொள்கைகளையும், கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கல் என்றுதான் கூற வேண்டும்.**

*- சி. எச். ஸ்பர்ஜன் -*
*(1834-1892)*

# *ஐந்தாம் ஆண்டில் திருமறைத்தீபம்:*

ஓராண்டைத் தாண்டுமோ என்று எண்ணிக்கொண்டிருந்த எங்கள் எண்ணங்ளையெல்லாம் பொய்யாக்கி ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிறது பத்திரிகை. அலட்டிக்கொள்ளாமல், ஆரவாரமில்லாமல், அமைதியோடு திருமறைத்தீபம் நடைபோட வேண்டும் என்பதே ஆரம்பமுதல் எமது நோக்கம். அதேமுறையில் வாசிக்கும் அன்பர்கள் எல்லாம் வாய்க்கு வாய் பத்திரிகை பற்றிய செய்தியைப்பரப்பி, தமிழ்கூறும் நல்லுலகெங்கும் கிறிஸ்தவ அன்பர்களின் அன்பையும், மதிப்பையும் பெற்று தாழ்மையோடு இப்புதிய வருடத்தை ஆரம்பித்திருக்கிறது திருமறைத்தீபம்.

புதிய வருடத்தில் கணனியின் இணையத்தில் தீபம் ஒளிவிட ஆரம்பித்திருக்கிறது. கணனி வசதியுள்ளவர்கள் பத்திரிகையை www.biblelamp.org என்ற இணைய முகவரியில் வாசிக்கலாம்.

இவ்விதழில் மெய்க்கிறிஸ்தவன் யார்? எனறு விளக்கும் அருமையான செய்தியை அல்பர்ட் என். மார்டின் தருகிறார். போலித்தனமாக, மாம்சத்தின் வழிகளில் கிறிஸ்துவுக்கு கூட்டம் சேர்க்கும் குழுக்களின் கைங்கரியங்களால், கிறிஸ்தவர்கள் என்று தம்மை அழைத்துக் கொள்ளும், மறுபிறப்பு என்றால் என்னவென்று அறியாத மக்கள் கூட்டத்தால் தமிழுலகம் இன்று நிரம்பி வழிகின்றது. இத்தகைய சூழ்நிலையில் அக்கறையோடு வாசித்துப் புரிந்து கொள்ள வேண்டிய அருமையான செய்தி இது. மேலெழுந்தவாரியாக இதை வாசித்து ஒதுக்கிவிடாமல் இதுபற்றி சிந்தித்து நீங்கள் மெய்க்கிறிஸ்தவர்தானா? என்று முடிவு செய்து கொள்ளுங்கள். பெயர்க்கிறிஸ்தவனாக இருப்பதைவிட பரலோக வாழ்க்கைக்குத் தேவையான தகுதி நமக்குண்டா என்று பார்த்துக் கொள்வது வரப்போகும் ஆபத்திலிருந்து நம்மைக் காக்கும். உங்கள் எண்ணங்களையும் ஆசிரியருடன் பகிர்ந்து கொள்ளத் தவறாதீர்கள்.



இவ்விதழில் வழமையாக வரும் சில ஆக்கங்கள் வரத் தவறியுள்ளன. வரப்போகும் இதழ்களில் அவை தொடர்ந்து வெளிவரும். வாசக அன்பர்களுக்கெல்லாம் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்.

*கிறிஸ்தவன் யார்? என்ற கேள்விக்கு அனேகர் விதவிதமான பதில்களை அள்ளித் தெளித்துக் கொண்டிருக்கும் இக்காலத்தில் அக்கேள்விக்கான வேதபூர்வமான பதிலைத் துல்லியமாகத் தருகிறார் அல்பர்ட் என். மார்ட்டின்.*

# கிறிஸ்தவன் யார்?

அல்பர்ட் என். மார்ட்டின்

நமது அறிவீனத்தின் காரணமாகவும், அக்கறையற்ற தன்மையின் காரணமாகவும் நமக்கு எந்தவிதமான பாதிப்பையோ அல்லது ஆபத்தையோ விளைவிக்கக் கூடாத பல காரியங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஒரு மண்ணிறத்து மாடு பச்சைப் புல்லைத்தின்று வெள்ளை நிறத்தில் எப்படிப் பாலைத் தருகிறது? என்பதற்கான விளக்கத்தைக் கொடுக்கக்கூடியவர்களும் நிச்சயமாக நம்மத்தியில் இருக்கவே செய்கின்றனர். நம்மில் அனேகருக்கு ஐன்ஸ்டைனின் கோட்பாட்டைப்பற்றி அடியோடு ஒன்றுமே தெரியாது. ஆனால், அதை விளக்கும்படி யாராவது நம்மை வற்புறுத்தினால் நம்பாடு கஷ்டம்தான். ஐன்ஸ்டைனின் கோட்பாட்டைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியாதது மட்டுமல்ல, அதைப்பற்றி நாம் அக்கறை கொள்வதுமில்லை. இருப்பினும், அதைப் பற்றிய நமது அறிவீனமோ, அக்கறைக்குறைவோ அத்தனை பாரதூரமானதோ, ஆபத்தானதோ அல்ல.

ஆனால், அதேவேளை, நமது அறிவீனத்தாலும், அக்கறையின்மையினாலும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தி, நமக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய ஒரு சில காரியங்களும் இருக்கின்றன. அத்தகைய ஒரு காரியமே, “கிறிஸ்தவன் யார்?” என்ற வினாவிற்கான விடையாகும். இன்னுமொருவிதத்தில் கூறப்போனால், ஒரு ஆணோ, பெண்ணோ, சிறுவனோ, சிறுமியோ வேதத்தின் அடிப்படையில் தம்மைக் கிறிஸ்தவன் என்று அழைத்துக் கொள்ளும் தகுதியை எப்போது அடைகிறார்கள்? என்பதே இவ்வினாவாகும்.

ஒரு ஆணோ, பெண்ணோ மெய்க்கிறிஸ்தவரா? என்பதை நாம் மிகச் சாதாரணமானதாக எண்ணித் தீர்மானித்து விடக்கூடாது. இதைப்பற்றி நாமெடுக்கும் தவறான முடிவு பாரதூரமானதும், ஆபத்தை விளைவிக்கக்கூடியதுமாகும். ஆகவே, கிறிஸ்தவன் யார்? என்ற வினாவிற்கான வேதபூர்வமான நான்கு விளக்கங்களை நான் உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.

**1. ஒரு கிறிஸ்தவன் என்பவன், வேதத்தின் அடிப்படையில் தனது பாவத்தை உண்மையாக உணர்ந்து புரிந்து கொண்டவன்.**

உலகிலுள்ள ஏனைய மதங்களையும், கிறிஸ்தவத்தையும் வேறுபடுத்திக் காட்டும் அநேக காரியங்களில் ஒன்று, கிறிஸ்தவம், அடிப்படையிலேயே பாவிகளின் மதம் என்பதே. இயேசு கிறிஸ்துவின் பிறப்பைப்பற்றி யோசேப்புக்கு அறிவித்த கர்த்தருடைய தூதன், “அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு எனறு பெயரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்” என்றான் (மத்தேயு 1:21). பவுல் அப்போஸ்தலன் 1 தீமோத்தேயு 1:15 இல், “பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான்” என்று கூறுவதைப் பார்க்கிறோம். லூக்கா 5:31–32 இல், இயேசு கிறிஸ்துவே, “பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை. நீதிமானகளையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார்” என்று கூறியுள்ளார். தனது பாவங்களை உணர்ந்து அதிலிருந்து விடுபடத்தேவையான நடவடிக்கைகளை எடுப்பவனே மெய்க்கிறிஸ்தவன்.

வேதத்தைப படித்துப் பார்க்கும்போது, பாவத்தைக்குறித்து இருவிதமான பிரச்சனைகளை நாம் ஒவ்வொருவரும் சுமந்து கொண்டிருப்பதை அது சுட்டிக்காட்டுகின்றது. அதாவது நம்மைக் குற்றவாளிகளாகக் காட்டும் ஒரு அறிக்கையையும், கெட்டுப்போன ஒரு இருதயத்தையும் நாம் சுமந்து கொண்டிருப்பதாக அது தெரிவிக்கின்றது. ஆதியாகமம் மூன்றாம் அதிகாரத்தில் ஆரம்பித்து, வேதத்தின் இறுதி நூலான வெளிப்படுத்தல் ஆகமம் வரை, கடவுளுக்கு முன் மனிதன் செய்த பாவத்தையும், அவனது வீழ்ச்சியையும், அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் பற்றி வாசித்துப் பார்ப்போமானால், பாவத்தைப் பற்றி வேதம் போதிக்கும் அனைத்தையும் இவ்விரண்டு அடிப்படைப் பிரிவுகளுக்குள் அடக்கிவிடலாம்.

நம்மைக் குற்றவாளிகளாகக்காட்டும் அறிக்கை என்றால் என்ன? வேதம் போதிக்கின்ற, பாவத்தின் காரணமாக நம்மைப்பீடித்துள்ள குற்றவுணர்வையே இவ் வார்த்தைப் பிரயோகத்தின் மூலம் நான் சுட்டிக்காட்ட முயல்கிறேன். நாம் இவ்வுலகில் பிறக்கு முன்பே குற்றவாளிகள் என்ற அறிக்கையை சுமக்கத்தொடங்கிவிட்டோம் என்று வேதம் போதிக்கின்றது. இப்படியாக, “ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ் செய்தபடியால், மரணம் எல்லோருக்கும் வந்தது

போலவும் இதுவுமாயிற்று” என்று ரோமர் 5:12 இல் வாசிக்கிறோம்.

எல்லோரும் எப்போது பாவம் செய்தார்கள்? நாமெல்லோரும் ஆதாமுக்குள் பாவம் செய்தோம். மனித குலமனைத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் படியாக கடவுள் ஆதாமை நியமித்தார். ஆதாம் பாவம் செய்தபோது நாமும் அவனோடு இணைந்து பாவம் செய்து, அவனோடு பாவத்தில் வீழ்ந்தோம். இதையே பவுல் அப்போஸ்தலன் 1 கொரி. 15:22 இல் பின்வருமாறு கூறுகிறார், “ஆதாமுக்குள் எல்லோரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லோரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.” ஏதேன் தோட்டத்தில் மனிதன் பாவத்தோடு படைக்கப்படவில்லை. ஆனால், ஆதாம் பாவம் செய்த உடனேயே நாமும் அப்பாவத்திற்குப் பொறுப்பாளிகளாக குற்றம் சுமத்தப்பட்டோம். ஆதாமின் மூல பாவத்தினால் நாமும் வீழ்ச்சியடைந்து சபிக்கப்பட்ட மனுக்குலத்தின் ஓர் அங்கமாக இருந்து வருகிறோம்.

அதுமட்டுமல்லாமல், நாம் பிறந்த பின்பு செய்கின்ற பாவச்செயல்களினால் நமது குற்ற உணர்வு மேலும் அதிகரிக்கின்றது என்று வேதம் போதிக்கின்றது. ஒரு பாவமும் செய்யாமல் நன்மையே செய்யத்தக்க நீதிமான் பூமியில் இல்லை என்று வேதம் கூறுகின்றது (பிரசங்கி 7:20). ஒவ்வொரு சிறு பாவமும் நமது குற்றவுணர்வை மேலும் அதிகப்படுத்துகிறது. பரலோகத்தில் நம்மைப்பற்றி இருக்கும் அறிக்கை ஒரு கறைபடிந்த அறிக்கை. கர்த்தர் நமது மானுட அனுபவங்களையெல்லாம், வளைந்து கொடுக்காத, வரையறுக்கப்பட்ட ஒருகோட்பாட்டின் அடிப்படையில் அளந்து பார்க்கிறார். அத்தகுதிக்கோட்பாடு நாம் செய்யும் செயல்களை மட்டுமல்லாமல், நமது உள்ளத்து உணர்வுகளையும், எண்ணங்களையும்கூட அளந்து பார்க்கின்றது. இதைப்பற்றிக்கூறும் இயேசு கிறிஸ்து, நீதியற்ற கோபமே கொலைக்கு மூலகாரணமென்றும், ஒரு பெண்ணை இச்சையோடு பார்ப்பது விபச்சாரமென்றும் போதித்துள்ளார் (மத்தேயு 5:22, 28).

தேவன் நம்மைப்பற்றிய மிகவிளக்கமான ஒரு அறிக்கையை வைத்திருக்கிறார். நியாயத்தீர்ப்பு நாளில் திறக்கப்படப்போகின்ற புத்தகங்களுடன் இவ்வறிக்கையும் இருக்கும் (வெளி. 20:12). அப்புத்தகங்களில், அவற்றின் தகுதிகளுக்கு உட்பட்டு நடக்காத அல்லது அவற்றிற்கு எதிரான நமது ஒவ்வொரு எண்ணங்களும், அனுபவங்களும், செயல்களும் பதிவு செய்யப்பட்டிருக்கும். அதனால்தான், நம்மைப் குற்றஞ்சாட்டும் அறிக்கையொன்றிருப்பதாகக் கூறுகிறோம். மெய்யான, ஜீவனுள்ள தேவனுக்கெதிராக நாம் செய்துள்ள பாவங்களினால் கறைபடிந்து குற்றவுணர்வுடன் நிற்கிறோம். இதனாலேயே, வேதமும், முழு மனுக்குலமும் தேவனுக்கு முன்பாக குற்றஞ் சாட்டப்பட்டு நிற்கின்றது என்று கூறுகிறது (ரோமர் 3:19).

**உலகிலுள்ள ஏனைய மதங்களையும், கிறிஸ்தவத்தையும் வேறுபடுத்திக் காட்டும் அநேக காரியங்களில் முக்கியமானது, கிறிஸ்தவம் அடிப்படையிலேயே பாவிகளின் மதம் என்பதுதான்.**

உங்களைத் தனிப்பட்டவிதத்தில் குற்றவாளியாகக் காணும் இவ்வறிக்கை பற்றிய எண்ணம் உங்கள் இருதயத்தை எப்போதாவது சுட்டெரித்தது உண்டா? ஆதாம் பாவம் செய்தபோது, தேவன் உங்களையும் குற்றவாளியாகக்கண்டு, அவரது, நீதிக்கும், பரிபூரணமான பரிசுத்தத்திற்கும் எதிராக நீங்கள் பேசியுள்ள ஒவ்வொரு வார்த்தைக்கும் பொறுப்பாளியாக உங்களைக் குற்றம் காண்கிறார் என்ற உண்மையைப் பற்றி சிந்தித்துப் பார்த்திருக்கிறீர்களா? அவரது நியாயப் பிரமாணத்திற்கு எதிராக நீங்கள் தொட்டு, சொந்தமாக்கிக்கொண்ட அனைத்துப் பொருட்களையும் அவர் அறிவார். அவருடைய சத்தியத்திற்கு எதிராக நீங்கள் பேசியுள்ள ஒவ்வொரு வார்த்தையையும் அவர் அறிவார். அவரது நியாயப்பிரமாணத்திற்கு எதிராக நீங்கள் செய்துள்ள ஒவ்வொரு செயலுக்கும் பதிலளிக்கும் படியாக உங்களைத் தன் முன் வரும்படி அழைக்கும் அதிகாரம் அவருக்கிருக்கிறது என்ற உண்மை உங்களுக்கு எப்போதாவது புலப்பட்டிருக்கின்றதா?

தேவனுக்கு முன் நம் அனைவரையும் குற்றவாளியாகக்காணும் இக்குற்றப் பத்திரிகை மட்டுமல்ல நமது பிரச்சனை. அத்தோடு, நாம் கேடான ஒரிருதயத்தையும் கொண்டிருக்கிறோம். பாவம், நாம் செய்துள்ள செயல்களினால் மட்டும் ஏற்படாமல், நமது தன்மையிலிருந்தும் தோன்றியது என்று வேதம் தெரிவிக்கிறது. ஆதாம் பாவம் செய்தபோது, தேவனுக்கு முன் குற்றவாளியாக மட்டும் நிற்காமல், தன்னில் முழுதாக கறைபடிந்து நின்றான்.

இதைப்பற்றி எரேமியா 17:9, “எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும், மகாகேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?” என்று கேட்டு விளக்குகின்றது. இயேசு கிறிஸ்து இதைக்குறித்து மார்க்கு 7:21 இல், மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகள் புறப்பட்டு வருவதாகக்கூறி, கொலை, விபச்சாரம், பெருமை போன்ற நாம் அன்றாடம் பத்திரிகையில் வாசிக்கும் எல்லா பாவகரமான செயல்களையும் அட்டவனையிட்டுத் தருகிறார். இயேசு இவையனைத்துமே, நமது இருதயமாகிய கேடான கிணற்றிலிருந்து புறப்பட்டு வருவதாகக் கூறுகிறார். கொலை, விபச்சாரம், பெருமை, களவுகள் ஆகியவை சீரளிந்த நமது சமுதாயத்தின் உந்துதலாலேயே ஏற்படுகின்றன என்று அவர் கூறவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும். இவ்வாறே நமது சமூகவியல் வல்லுனர்கள் தொடர்ந்து கூறி வருகிறார்கள். சமுதாயத்தின் தன்மையே எதிர்ப்பு மனப்பான்மையையும், கேட்டையும் தோற்றுவிப்பதாக அவர்கள் கூறிவருகிறார்கள். ஆனால், இயேசு மனிதனின் கேடான இருதயத்தில் இருந்து இவை புறப்படுவதாகக் கூறுகிறார்.

வேதம் கூறுவதுபோல் நாம் ஒவ்வொருவரும் மகா கேடுள்ள ஒரு இருதயத்தைக் கொண்டிருக்கிறோம்.

ரோமர் 8:7, "மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை; அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது" என்று கூறுகிறது. இங்கே, மாம்ச சிந்தை, அதாவது, தேவனால் புதுப்பிக்கப்படாத சிந்தை, தேவனுக்கெதிரான ஒருவகையான விரோதத்தைக் கொண்டிருக்கிறது என்று பவுல் கூறவில்லை என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். மாறாக, மனிதனுடைய மாம்ச சிந்தையே விரோதமான பகை என்று அவர் கூறுகிறார். ஒவ்வொரு மனிதனுடைய இருதயமும், இயற்கையிலேயே தேவனுக்கு எதிராக உயர்த்தப்பட்டுள்ள முஷ்டியாகவே இருக்கின்றது. கேடான இருதயம் பாவத்தின் மேல் அன்பு செலுத்துகிறது; பாவத்தின் ஊற்றாக இருக்கின்றது; தேவனை விரோதிக்கின்றது - இதுவே கேடான இருதயத்தின் இயற்கைத்தன்மை.

உங்களுடைய இருதயத்தின் கேடான தன்மையைக் குறித்து தனிப்பட்டவிதத்தில் நீங்கள் எப்போதாவது கவலையடைந்ததுண்டா? இவ்வாறு கேட்பதன் மூலம், மனிதன் பாவி என்ற கோட்பாட்டை நீங்கள் நம்புகின்றீர்களா? என்று நான் கேட்கவில்லை. மாம்சத்தன்மையும், கேடான இருதயமும் நிச்சயம் உண்டு என்றுகூட நீங்கள் ஒருவேளை நம்பக் கூடும். நான் கேட்பதென்னவென்றால், உங்களைப்பற்றிய குற்றப்பத்திரிகையும், உங்களுடைய இருதயம் கேடானது என்ற உண்மையும், தனிப்பட்டவிதத்தில் உள்ளார்ந்த, ஆழமான கவலையை உங்களுள்ளத்தில் ஏற்படுத்தியதுண்டா? என்பதுதான். பரிசுத்தமான தேவனுக்கு முன்பாக, உங்களுடைய மோசமான குற்றமுள்ள இருதயத்தின் நிலைமையை நீங்கள் தனிப்பட்டவிதத்தில் உணர்ந்ததுண்டா? எல்லாவற்றைப் பார்க்கிலும் மகா கேடுள்ளதும், திருக்குள்ளதுமாக உங்கள் இருதயம் இருக்கின்றது என்ற உண்மையை சந்திதிருக்கிறீர்களா?

> **தன்னுடைய பாவத்தைப்பற்றி ஆழமாக அறிந்து உணர்ந்தவனே வேதபூர்வமான கிறிஸ்தவன்.**

தன்னுடைய பாவத்தைப்பற்றி ஆழமாக அறிந்து உணர்ந்தவனே வேதபூர்வமான கிறிஸ்தவன். தமது பாவத்தின் கோரத்தின் சுமையை எல்லோரும் ஒரேவிதத்தில் உணர்வதில்லை. அது ஆளுக்கு ஆள் வித்தியாசமானதாக இருக்கும். அதை ஒருவர் அனுபவபூர்வமாக உணர்ந்து கவலை கொள்ளும் கால அளவும் ஆளுக்கு ஆள் வேறுபடும். இவ்வனுபவங்கள் ஆளுக்கு ஆள் வேறுபட்டபோதும் மாபெரும் வைத்தியரான இயேசு கிறிஸ்து தன்னைப் பாவியாகக் கண்டுணராத எந்த ஒரு மனிதனையும் இரட்சிப்பதில்லை. "நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்" (மத்தேயு 9:13) என்று இயேசு கூறியுள்ளார். நீங்கள் தனிப்பட்டவிதத்தில் உங்களைப் பாவி என்று வாழ்க்கையில் ஆழமாக உணர்ந்த வேதபூர்வமான கிறிஸ்தவரா?

**2. வேதபூர்வமான கிறிஸ்தவன் என்பவன், பாவத்திலிருந்து விடுபடுவதற்கான ஒரே தெய்வீக வழிமுறையை ஆழமாக அறிந்துணர்ந்தவன்.**

பாவியாகிய மனிதனின் விடுதலைக்காக தேவனே நேரடியாக ஒரு காரியத்தைச் செய்திருக்கிறார் என்று வேதம் அடிக்கடி சொல்கிறது. சிறுவயதிலிருந்தே நம்மில் சிலர் மனப்பாடம் செய்துள்ள பின்வரும் வசனங்கள் தேவன் எடுத்துள்ள அத்தகைய நடவடிக்கையைப்பற்றி விளக்குகின்றன. "தேவன் இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்து தனது ஒரே பேரான குமாரனைத் தந்தருளினார்" (யோவான் 3:16); "நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரப்பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது" (1 யோவான் 3:10); "தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்பு கூர்ந்த நம்முடைய மிகுந்த அன்பினாலே . . ." போன்ற வசனங்கள் தேவன் எடுத்துள்ள நடவடிக்கையைச் சுட்டிக் காட்டுகின்றன.

கிறிஸ்தவ விசுவாசத்தின் தனித்தன்மை என்னவென்றால், அது, தேவனுடைய துணையோடு நமது வாழ்க்கையின் ஓட்டை, ஒட்டடைகளை நாமே அடைத்துக்கொள்ள உதவும் ஒருவித சுயசமய வழிமுறையல்ல. கிறிஸ்தவ விசுவாசத்தின் தனித்துவமானது, கிறிஸ்து மட்டுமே பாவிகளின் இரட்சகராக இருப்பதுமட்டுமன்றி, நமது எல்லாத் தேவைகளையும் நிவர்த்தி செய்யும் துணையாக அவர் மேலிருந்து நம்மை நாடிவந்து நாமிருக்கும் இடத்திலேயே நம்மைச் சந்திக்கிறார் என்பதிலேயே தங்கியிருக்கிறது. எம்மை நாமே எவ்விதத்திலும் உயர்த்திக் கொள்ள முடியாது. நம்மால் ஒருபோதும் செய்ய முடியாததை தேவனே மனிதனுடைய நிலைமையில் தலையிட்டு செய்திருக்கிறார்.

வேதத்தை வாசித்துப் பார்க்கும்போது, தேவனுடைய தெய்வீக வழிமுறை மூன்று தன்மைகளைக் கொண்டமைந்திருப்பதைப் பார்க்கலாம்:

(அ). முதலாவதாக பாவத்திலிருந்து மனிதனை விடுவிப்பதற்கான தெய்வீக வழிமுறை ஒரு நபரில் தொகுத்துக் காணப்படுகின்றது. அந்நபரே நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. மனித உருவெடுத்து, மானிட தன்மையைத் தனது தெய்வீகத்தன்மையுடன் ஒருங்கிணைத்துக் கொண்ட நித்திய வார்த்தை. தேவனுக்குமுன் குற்றஞ்சாட்டப்பட்டு குற்றப் பத்திரிகையையும், கேடான இருதயத்தையும் சுமந்து கொண்டிருக்கும் மனிதனின் விடுதலைக்காக தேவன் தந்திருக்கும் வழிமுறை இதுதான் – தேவனும் மனிதனுமாக, அவ்விரு தன்மைகளையும் தன்னில் எப்போதைக்கும் உள்ளடக்கிக் கொண்டுள்ள இரட்சகரே அவ்வழிமுறை. வேதபூர்வமாக உங்களுடைய பாவத்திற்கு முடிவு ஏற்பட வேண்டுமானால், தனிப்பட்ட முறையில் நீங்கள் இயேசு கிறிஸ்துவை நாடி வர வேண்டும். இதுவே கிறிஸ்தவ விசுவாசத்தின் தனித்தன்மை. பாவியாகிய மனிதன் தனது தேவைகள் அனைத்துடனும் கிறிஸ்துவின் கிருபையின் பூரணத்துவத்தால் அவரோடு இணைக்கப்படுதல் – பாவி தனது தேவைகளுடனும், கிறிஸ்து

தனது வல்லமையுடனும் நற்செய்தியால் ஒருங்கிணைக் கப்படுதல். இதுவே பாவிகளுக்கான தேவனின் மகிமை யுள்ள நற்செய்தியாகும்.

(ஆ). இரண்டாவதாக, பாவ நிவாரணத்திற்கான தெய் வீக வழிமுறை, இயேசு கிறிஸ்து மரித்த சிலுவையை மையமாகக் கொண்டது. வேதத்தை வாசித்துப் பார்க் கின்றபோது பாவநிவாரணத்திற்கான தெய்வீக வழி முறை சிறப்பானவகையில் சிலுவையை மையமாகக் கொண்டமைந்துள்ளதைப் பார்க்கின்றோம். யோவான் ஸ்நானன் இயேசுவைப் பார்த்தபோது, பழைய ஏற்பாட்டுப் பலியாட்டை நினைவுகூறி, இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கின்ற தேவ ஆட்டுக்குட்டி என்று அழைப்பதைப் பார்க்கின்றோம். இயேசு கிறிஸ்துவும் கூட, மனுஷகுமாரனும் ஊழியங் கொள்ளும்படி வராமல், ஊழியம் செய்யவும், அனேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்.

மெய்யான நற்செய்திப் பிரசங்கம் சிலுவையை மைய மாகக்கொண்டிருப்பதால் பவுல் அப்போஸ்தலனும் கூட அதனை சிலுவையைப் பற்றிய பிரசங்கம் என்று கூறியுள்ளார். “சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பலனாயிருக் கிறது” (1 கொரி. 1:18). பவுல், கிரேக்கப் போதனைகளுக் கும், வெறும் அறிவு ஜீவிகளுக்கும் பெயர்போன கொரிந்து நகருக்கு வந்தபோது, அவர்களுடைய பேச்சுத்திறனைப் பின்பற்றாது, “இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்” (1 கொரி. 2:2) என்று கூறியதைப் பார்க்கிறோம்.

சிலுவையை நாம் ஒரு வெறும் போதனையாகவோ அல்லது சமய அடையாளமாகவோ கருதிவிடக்கூடாது. தேவன் அதைக்குறித்துச் சொல்லியிருப்பவற்றையே சிலுவையின் மெய்ப்பொருளாகக் கருத வேண்டும். சிலுவையிலேயே தேவன் தனது மக்களின் பாவங்கள் அனைத்தையும், தனது குமாரனின் மேல் சுமத்தினார். அச்சிலுவையில் இயேசு கிறிஸ்து நமது சாபங்களைத் தன்மேல் சுமந்தார். “கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்” என்று பவுல் கூறுகிறார் (கலா.

# பத்திரிகை பற்றிய முக்கிய அறிவித்தல்

கர்த்தருடைய கிருபையினால் கடந்த நான்கு வருடங்களாக திருமறைத்தீபத்தை இலவசமாக எம்மால் விநியோகிக்க முடிந்தது. கேட்டு எழுதியவர்களுக்கெல்லாம் இதுவரை பத்திரிகையை யும், நூல்களையும் முடிந்தவரை இலவசமாக அனுப்பி வந்துள்ளோம். சீர்திருத்தவாத சத்தியத்தைப் பலரும் அறிந்து கொள்ள பத்திரிகை செயல்பட வேண்டுமென்பதே எமது ஒரே நோக்கம். அந்நோக்கத்தால் உந்தப்பட்ட தனிப்பட்டவர்களுடைய நிதி உதவியினாலேயே இவ்வூழியத்தை தொடர்ந்து நடத்தி வருகிறோம். ஆனால், பெருகிவரும் வாசகர் எண்ணிக்கை யும், பத்திரிகையின் வெளியீட்டுச் செலவும், தொடர்ந்தும் பத்திரிகையை இலவசமாகக் கேட்டு எழுதுபவர்களுக்கெல்லாம் அனுப்ப முடியாத ஒரு தவிர்க்க முடியாத சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளது. எனவே, பத்திரிகை விநியோகத்தில் சில முக்கியமான மாற்றங்களைக் கொண்டுவர வேண்டிய ஒரு நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். வாசகர்கள் தயவு செய்து பின்வரும் மாற்றங்களைக் கருத்தில் கொண்டு, இவ்வூழியத்திற்கு துணைபுரிவதோடு தொடர்ந்து இதனை ஜெபத்திலும் தாங்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

1. பத்திரிகையைத் தொடர்ந்து பெற்றுக் கொள்ளும் வாசகர்கள் தயவு செய்து அதனை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும். அதேவேளை, புதிதாக பத்திரிகையைப் பற்றி அறிந்து கொள்பவர்கள் தயவு செய்து எவரிடம் பத்திரிகையைப்பற்றி அறிந்து கொண்டீர்களோ அவர்களிடமே தொடர்ந்தும் அதனைப்பெற்று வாசித்துப் பயன்பெறும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். இது தபால் செலவைக் குறைக்க எமக்குப் பேருதவி புரியும்.

2. இதுவரை மேலதிக பத்திரிகை பிரதிகளைப் பெற்றுக் கொண்ட வாசகர்களுக்கு எம்மால் தொடர்ந்தும் மேலதிகமான பிரதிகளை அனுப்பி வைக்கமுடியாதென்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மறு அறிவித்தல்வரை இவற்றை அனைவரும் பின்பற்றுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

3:13). "அத்தோடு, நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (2 கொரி. 5:21) என்றும் பவுல் கூறுவதைப் பார்க்கிறோம்.

சிலுவையானது, சுயநலமற்று தன்னையே ஒப்புக் கொடுக்கும் தூய அன்பினை விளக்க முடியாத ஒரு அடையாளமல்ல; மாறாக தேவன், நீதியுள்ளவராக இருந்தும் குற்றமுள்ள பாவிகளை எப்படி மன்னிக்க முடியும் என்பதை விளக்கிக்காட்டும் ஒரு நினைவுச் சின்னம். தேவன் சிலுவையில், தனது மக்களின் பாவங்களை கிறிஸ்துவின் மேல் சுமத்தியபின், தனது மக்களின் பிரதிநிதியாகிய கிறிஸ்துவை நியாயம் தீர்த்தார். அச்சிலுவையிலே தனது குமாரன், என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் என்று கதறுமளவுக்கு எந்தவித பரிவும் காட்டாமல் தனது கோபத்தை அவர் மேல் கொட்டினார் (சங்கீதம் 22:1; மத்தேயு 27:46).

கல்வாரியிலே தேவன், நம் கண்களுக் குத் தெரியாத, ஆன்மீக உலகில் என்ன நிகழ்கிறது என்பதை இவ்வுலகில் நடத்திக் காட்டினார். முழு உலகத்தை யும் இருட்டினால் நிரப்பி, என் பாவங் களுக்காகவும், உங்களுடைய பாவங் களுக்காகவும் தனது குமாரன் எத்தகைய இருளான நரகத்திற்குள் தள்ளப்பட்டார் என்று தேவன் காட்டுகிறார். சிலுவையிலே ஒரு குற்றவாளியைப்போல கிறிஸ்து தொங்கினார். அன்றைய சமுதாயம், அவரைப் பார்த்து, தொலைத்துக் கட்டுங்கள், கொல்லுங்கள் என்று அலறியபோது தேவன் அதைக் குறித்து ஒன்றுமே செய்யவில்லை. இதன் மூலம் நமது ஊனக் கண்களால் பார்க்க முடியாத இடத்தில் என்ன நடக்கின்றது என்பதை, நம்முன்னால் தேவன் நடத்திக் காட்டுகிறார். அவர் தனது குமாரனை ஒரு குற்றவாளியைப்போல நடத்தினார். நம்மேல் காட்ட வேண்டிய தனது ஆக்ரோசமான கோபாக்கினியை இயேசுவின் மேல் கொட்டி, தனது ஆவியில் அவர் அதனை அனுபவித் துணருமாறு செய்தார்.

**தேவன், நீதியுள்ளவராக இருந்தும் குற்றமுள்ள பாவிகளை எப்படி மன்னிக்க முடியும் என்பதை விளக்கிக்காட்டும் நினைவுச் சின்னமே சிலுவை.**

(இ). மூன்றாவதாக, தேவனின் பாவமீட்புக்கான வழி அனைத்து மனிதர்களையும் மீட்கப் போதுமானதாக இருப்பதோடு, எந்தவிதமான ஏற்றத்தாழ்வுமின்றி எல்லா மனிதர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. பாவத்தைப்பற்றிய எந்தவிதமான உணர்வுமின்றி, தேவன் பாவிகளை மன்னித்துவிடுவார் என்று நாம் சுலபமாக எண்ணிவிடலாம். ஆனால், பாவம் என்றால் என்ன என்று நாம் சிந்தித்துப் பார்த்துப் புரிந்து கொள்ளும்போது நமது எண்ணங்கள் மாற்றமடைகின் றன. அப்போது, நாம் நம்மை வெறும் சாதாரண மண்புழுக்களாகப் பார்க்கிறோம்; அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம் (அப்போஸ். 17:28) என்று எழுதியிருக்கிறபடி தேவனின் கரத்திலேயே நமது வாழ்வும் ஜீவனும் இருக்கிறதென்ற உண்மையைப் புரிந்து கொள்கிறோம்.

தேவ தூதர்கள் தமக்கெதிராக நடந்தபோது அவர்களை நித்திய இருட்டுக்கு ஒப்படைத்த தேவனுக்கு எதிராக நடக்கத் துணிந்த நமது நிலைமையைப்பற்றி நாம் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கத் தொடங்குகிறோம். பரிசுத்தமான தேவன் நமது கொந்தளிக்கும் ஆவியையும், இருதயத்தின் கேட்டையும் பார்க்கிறார் என்று அறிக்கையிடுகிறோம். ஆகவே, ஆண்டவரே! நீர் நீதியுள்ளவராக மட்டுமே இருக்க முடியும். எனது பாவத்திற்காக நீர் என்னைத் தண்டிப்பதானால் தேவகோபத்தையும், நியாயத்தீர்ப்பையும் மட்டுமே நான் சந்திக்க வேண்டும். என்னை மன்னித்து விட்டு தொடர்ந்து நீர் எப்படி நீதியுள்ளவராக இருக்க முடியும்? நீதியுள்ள தேவனாக இருக்கும் நீர், உமக்கு எதிராக நடந்த பொல்லாத தேவதூதர்களுடன் என்னை யும் நித்திய தண்டனைக்கு ஒப்படைப்பதைத்தவிர எவ்வாறு வேறெதையும் செய்ய முடியும்? என்று கதறு கிறோம்.

எமது பாவத்தின் தன்மையை நாம் சரியாகப் புரிந்து கொள்ளும்போது, அப்பாவத்திற்காக தேவனின் மன்னிப்பை நாடுவதென்பது, இதுவரை நமது மனம் சந்தித்திராத பிடிவாதமான ஒரு போராட்டமாக அமைகின்றது. அப்போதே, நாம் ஒரு நபரில், அதாவது சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து வாகிய அந்நபரில், எல்லா மனிதர்களின் பாவநிவாரணத்திற்கும் போதுமானதைத் தேவன் அளித்திருப்பதோடு, அதை எல்லா மனிதர்களுக்கும் எந்தவிதமான ஏற்றத்தாழ்வுமின்றி அளிக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தேவன், நாம் கிறிஸ்துவைப் பெற்றுக் கொள்வதற்காக எந்த நிபந்தனையையும் விதித்திருந்தால், "அந்நிபந்தனைகளை என்னால் நிறைவேற்ற முடியாது; அவற்றை நிறைவேற்றும் தகுதி எனக் கில்லை", என்று நாம் கூறியிருப்போம். ஆனால், தேவன் அளிக்கும் உன்னதமான விடுதலை, ஏசாயாவின் மொழியில், "ஓ, தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லோரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர்களே நீங்கள் வந்து வாங்கிச் சாப்பிடுங் கள், நீங்கள் வந்து பணமுமின்றி, விலையுமின்றித் திராட்சை இரசமும் பாலும் கொள்ளுங்கள்" (ஏசாயா 55:1) என்று அறைகூவலிடுகிறது. அத்தோடு இயேசுவும், "என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவ தில்லை" (யோவான் 6:37) என்று வலியுறுத்திக் கூறுகிறார்.

இயேசு கிறிஸ்துவுக்குள் கொடுக்கப்பட்டுள்ள இலவசமான கிருபையின் அழகைக் கவனித்துப் பாருங்கள்! இனித் தேவன் வானத்தில் இருந்து வெளிவந்து, நமது பெயரைக் கூறி, நாம் அவரிடத்தில் வர வேண்டும் என்ற கட்டளை யிருக்கிறது என்று நம்மிடம் சொல்ல வேண்டிய அவசியமி ல்லை. அக் கிருபையின் அழைப்பை. "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடத் தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாருதல் தருவேன்." என்று கூறி அவரது ஒரே குமாரன் நமக்குக் கொடுக்கிறார்.

**3. தேவனளிக்கும் பாவநிவாரணத்தைப் பெற்றுக் கொள்வதற்கான அவரது நிபந்தனைகளை முழுமனத்தோடு ஏற்று, அவற்றிற்கு இசைந்து நடப்பவனே வேதபூர்வமான கிறிஸ்தவன்.**

அத்தகைய தேவ நிபந்தனைகள் இரண்டாகும்: முதலாவது மனந்திரும்புதல், இரண்டாவது, விசுவாசம். இயேசு கிறிஸ்துவின் ஊழிய ஆரம்பத்தைக் குறித்து வேதம் பின்வருமாறு கூறுகிறது: "யோவான் காவலில் வைக்கப் பட்டபின்பு, இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய இராஜ்யத்தின் சுவிஷேசத்தைப் பிரசங்கித்து: காலம் நிறைவேறிற்று, தேவனுடைய இராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி சுவிஷேசத்தை விசுவாசியுங்கள்" (மார்க்கு 1:14-15) என்றார். தான் உயிர்த்தெழுந்தபின் இயேசு தனது சீடர்களைப் பார்த்து, "அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசெலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக் கப்படவும் வேண்டியது" (லூக்கா 24:47) என்று கூறினார். பவுல், "தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக் குறித்தும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதைக் குறித்தும் நான் யூதருக்கும், கிரேக்கருக்கும் சாட்சியாக அறிவித்தேன்" (அப்போஸ். 20:21) என்று கூறியிருப்பதையும் பார்க்கிறோம்.

தெய்வீக வழிமுறையைப் பெற்றுக் கொள்ள விதிக்கப்பட்டிருக்கும் தெய்வீக நிபந்தனைகள் யாவை? நாம் மனந் திரும்ப வேண்டும்; அடுத்ததாக நாம் விசுவாசிக்க வேண்டும். இவ்விரண்டையும் இவ்வாறாகப் பிரித்து ஆராய்வது அவசியமாக இருந்தபோதும், மனந்திரும்புதல் விசுவாசத்தோடு தொடர்பற்றதாகவோ, அல்லது விசுவாசம் மனந்திரும்புதலோடு தொடர்பற்றதாகவோ இருக்கிறது என்று நாம் கருதிவிடக்கூடாது. மெய்யான மனந்திரும்புதல் விசுவாசத்துடன் ஒன்றரக் கலந்ததாக வும், மெய்யான விசுவாசம் மனந்திரும்புதலோடு ஒன்றரக் கலந்ததாகவும் உள்ளது. இது எப்படியெனில், தேவனுடைய தெய்வீக வழிமுறை ஏற்றுக்கொள்ளப்படும் போது அங்கே, விசுவாசித்து மனந்திரும்பும் மனிதனையும், மனந்திரும்பி விசுவாசிக்கும் மனிதனையும் பார்க்கலாம்.

மனந்திரும்புதல் என்றால் என்ன? நமது பெரியோர்கள் அருளித் தந்த வினாவிடைப் பயிற்சிக் கோட்பாடு இதற்கு அருமையான பதிலை அளிக்கிறது. மனந் திரும்புதல் என்றால், ஒரு பாவி தனது பாவத்தை மெய்யாகவே உணர்ந்து, அப்பாவத்திற்காக வருந்தி, அதனை வெறுத்து, விலக்கி, கிறிஸ்துவுக்குள்ளான தேவனின் கிருபையை ஏற்று, முழு மனதோடும், வைராக்கியத்தோடும் ஒரு புதிய கீழ்ப்படிதலுக்காக அவரை நாடி ஓடச் செய்யும் இரட்சிக்கும் கிருபையே மனந்திரும்புதலாகும்.

கெட்ட குமாரன் தூர தேசத்தில் தனது நிலையை உணர்தலே மனந்திரும்புதலாகும். தனது தகப்பனோடு வீட்டில் இருப்பதை விட்டு, ஆஸ்தியில் தனது பங்கைப்பெற்றுக் கொண்டு, தூர தேசத்திற்குப் போய், தவறான வழியில் அதை இல்லாமலாக்கினான் கெட்ட குமாரன். தனது தவறான பாவச் செயல்களால் கெட்டுப்போய் புத்தி தெளிந்தபோது, அவன், என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்கு பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் வாடுகிறேன். நான் எழுந்து என் தகப்பனிடத்திற்குப் போய்; "தகப்பனே பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ் செய்தேன். இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக் கொள்ளும் என்று சொல்வேன்" என்று சொல்லி எழுந்து போனான்.

கெட்ட குமாரன் தனது பாவத்தை உணர்ந்தபோது அவன் அங்கேயே அமர்ந்து அதைப்பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கவில்லை. அதைப்பற்றி எண்ணிப் பாட்டுப்படவில்லை. தனது தகப்பனுக்கு அதைப்பற்றி கடிதம் எழுதவில்லை. வேதம் சொல்கிறது, அவன் எழுந்து புறப்பட்டு தனது தகப்பனிடத்தில் வந்தான் என்று. பாவத்தில் உழன்று கொண்டிருக்கும் தனது நண்பர்களை அவன் கைகழுவிவிட்டு வந்தான். தனது பழைய வாழ்க்கையோடு தொடர்புடைய அனைத்தையும் அவன் உதறித் தள்ளிவிட்டு வந்தான். வீட்டிற்குப் போக வேண்டும் என்று அவனை உந்தித் தள்ளியது எது? பரந்த இருதயத்தைக் கொண்டு, கருணையே உருவாக, நீதியோடு தனது வீட்டை ஆண்டு கொண்டு இருக்கும் ஒரு தந்தை அங்கே இருக்கிறார் என்ற நம்பிக்கைதான். அவன் தன் தந்தைக்கு கடிதம் எழுதி, தந்தையே, இங்கே நிலைமை சரியாக இல்லை, எனது மனச்சாட்சி இரவெல்லாம் என்னைக் கொல்கிறது, எனக்குப் பணமனுப்பி உதவி செய்யக்கூடாதா? ஒரு முறை இங்கே வந்து என்னைப் பார்த்து ஆறுதல் சொல்லி என்னை ஆனந்தப்படுத்தக்கூடாதா? என்று கேட்கவில்லை. அவனுக்கு தேவைப்பட்டது வெறும் மனச்சமாதானம் அல்ல; நீதிமானாக வேண்டியதுதான். அதனால்தான் அவன் தூர தேசத்தை விட்டு விலகி வந்தான்.

> **மெய்யான மனந்திரும்புதல் விசுவாசத்துடன் ஒன்றரக் கலந்ததாக வும், மெய்யான விசுவாசம் மனந்திரும்புதலோடு ஒன்றரக் கலந்ததாகவும் உள்ளது.**

கெட்ட குமாரன் திரும்பி வந்தபோது தன் தகப்பனை நாடித் தான் எடுத்த தீர்மானத்தைப் பற்றி பெருமை யடித்துக் கொள்ளவில்லை. அவனது வருகையைப்பற்றி இயேசு மிக அழகாக வர்ணித்திருப்பதைப் பாருங்கள். "அவன் தூரத்தில் வரும்பொழுதே, அவனுடைய தகப்பன் அவனைக்கண்டு, மனதுருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ் செய்தான்" (லூக்கா 16:20).

இன்று, சுவிஷேசக்கூட்டங்களில் கொடுக்கப்படும் அழைப்பை ஏற்று முன்னால் போய், ஒரு சிறிய ஜெபத்தைச் செய்து, தேவனுக்காக தீர்மானத்தை

எடுப்பதன் மூலம் அவருக்குப் பெரும் சேவை செய்து விட்டதாகப் பலர் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். இதற்கும் மெய்யான மனந்திரும்புதலுக்கும் எந்தத் தொடர்புமில்லை. பரலோகத்திலிருக்கும், பெரியவரும், கிருபையுடையவரும், பரிசுத்தமானவரும், அன்புடையவரு மான தேவனுக்கு எதிராகப் பாவம் செய்துவிட்டேன்; அவரது பிள்ளை என்று என்னை அழைத்துக் கொள்ள எந்தத் தகுதியும் எனக்கு இல்லை என்று தேவனிடம் கதறுவதே மெய்யான மனந்திரும்புதலுக்கு அடையாளம். அதேநேரம், நான் எனது பாவத்தைவிட்டு விலகி, அதற்குப் புறமுதுகு காட்டித், தாழ்மையுடன், தேவன் எனக்குக் கருணை காட்டுவாரோ? என்று சிந்தனை யோடு திரும்பிவரும்போது - அதிசயங்களுக்கெல்லாம், அதிசயமாக - என் தந்தை என்னை வழியில் சந்தித்து அன்போடு, தனது கருணையின் கரங்களால் என்னைக் கட்டித் தழுவுகிறார். நான் உணர்ச்சிவசப்படாமல், மெய்யாகவே சொல்கிறேன் - அவர் மனந்திரும்பிவரும் பாவியை தனது மன்னிப்பாலும், மீட்பின் அன்பாலும் மூச்சுத் திணர வைக்கிறார்.

ஆனால், கெட்ட குமாரன் தனது பாவத்தில் திளைத்து, வேசித்தனத்தில் புரண்டு கொண்டிருக்கும் வேளையில் தந்தை அவனை அரவணைக்கவில்லை. உலக ஆசைகளுக்கும், இச்சைகளுக் கும் தம்மைப் பறிகொடுத்திருப்பவர் களுக்கு நான் சொல்வது புரிகிறதா? பெற்றோர்களுடனும், சமுதாயத்தில் மற்றவர்களுடனும் நடந்து கொள்ளும் முறையிலும், சொந்த வாழ்க்கையில் எப்படி நடந்து கொள்கிறீர்கள் என்பதன் மூலமுமே உங்களுடைய சுயருபத்தை நீங்கள் வெளிப்படுத்துகிறீர்கள்.

பாவத்திற்கு இருதயத்தில் இடம் கொடுக்காமலிருப்பதே மனந்திரும்புதலாகும்; ஆனால், அது எப்போதுமே விசு வாசத்துடன் இணைந்து காணப்படும்.

உங்களில் சிலர், வேசித்தனத்தில் ஈடுபட்டிருக்கலாம், அல்லது பெண்க ளுடன் தவறான உறவு வைத்திருக்கலாம், அல்லது தொலைக்காட்சியில் பார்க்கக்கூடாத படங்களை பார்த்துச் சுவைத்துக் கொண்டிருக்கலாம், இதை யெல்லாம் செய்து கொண்டு உங்களைத் தேவனின் பிள்ளை என்று அழைத்துக் கொள்கிறீர்கள். பாவத்தோடு உறவாடிக்கொண்டு, ஞாயிற்றுக்கிழமை தேவனின் ஆலயத்திற்குப் போய்வருகிறீர்கள். இது உங்களுக்கே வெட்கமாக இல்லையா? பாவத்தை விட்டு விலகி யோடுங்கள். மாம்ச இச்சைகளுக்கு இடம் கொடுத்து நடக்கும் வழிமுறைகளை இன்றே உங்கள் வாழ்க்கையில் அழித்துப் போடுங்கள். பாவத்தை விட்டு விலகியோடு வதே மெய்யான மனந்திரும்புதல். பாவத்தோடு உறவாடிக் கொண்டிருக்கும்வரை தேவனின் மன்னிக்கும் கிருபையை நீங்கள் அனுபவிக்க மாட்டீர்கள்.

பாவத்திற்கு இருதயத்தில் இடம் கொடுக்காமலிருப்பதே மனந்திரும்புதலாகும்; ஆனால், அது எப்போதுமே விசு வாசத்துடன் இணைந்து காணப்படும். அப்படியானால் விசுவாசம் என்றால் என்ன? நற்செய்தியின் மூலம் நமக்கு வழங்கப்படும் கிறிஸ்துவுக்கு நமது ஆவியை சமர்ப்பிப்பதே விசுவாசமாகும். “அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்” (யோவான் 1:12). விசுவாசம் என்பது கிறிஸ்துவை அருந்துவது போலா கும். ஏனெனில், எனது ஆவியின் தாகத்தைக் கிறிஸ்துவைக் குடிப்பதன் மூலம் தீர்த்துக் கொள்கி றேன். அதுமட்டுமல்லாது, கிறிஸ்துவை நோக்குவதற்கும், பின்பற்றுவதற்கும், அவரை நாடி ஓடுவதற்கும் விசுவா சம் ஒப்பிடப்படுகிறது. வேதம், விசுவாசத்தைப்பற்றி விளக்குவதற்கு அநேக அடையாளங்களைப் பயன் படுத்துகிறது. அவை அனைத்தையும் ஒன்று சேர்த்துப் பார்த்தால், விசுவாசத்தைக் குறித்துப் பின்வருமாறு விபரிக்கலாம்: பாவிகளுக்கு தான் வாக்குத்தத்தம் செய்துள்ளபடி கிறிஸ்து எனக்கும் இருப்பாரென்ற நம்பிக்கையோடு, எனது தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட அவரிடம் என்னை ஒப்படைக்கிறேன்.

தனது வெறுங் கரங்களால் கிறிஸ்துவையும், அவர் அளிக்கும் அனைத்தையும் எடுத்துக் கொள்வதைத் தவிர வேறெதையும் விசுவாசம் கிறிஸ்துவிடம் கொண்டுவருவதில்லை. கிறிஸ்துவிடம் அப்படி என்ன இருக் கிறது? என்னுடைய பாவங்கள் அனைத் திற்குமான முழு மன்னிப்பும் அவரி டமே இருக்கின்றது. அவருடைய பூரணமான கீழ்ப்படிதல் என்னுடைய கணக்கில் வைக்கப்படுகிறது. அவருடைய மரணம் என்னுடைய மரணமாகக் கருதப்படுகிறது. அவருக்குள்ளாக நான் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்கிறேன். அத்தோடு, மகவேட்பு, பரிசுத்தம், இறுதியில் மகிமை இவையனைத்தையும் விசுவாசம் கிறிஸ்துவுக்குள்ளாக நமக்கு அளிக்கிறது. “நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள். எழுதியிருக்கிறபடி மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேன்மை பாராட்டத்தக்கதாக, அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்” (1 கொரி. 1:30) என்று பவுல் கூறுகிறார்.

கிறிஸ்தவன் யார்? என்று கேட்கிறீர்களா? பாவநிவா ரணத்திற்கான தெய்வீக வழிவகையை அடைவதற்காக விதிக்கப்பட்டுள்ள தெய்வீக நிபந்தனைகளுக்குத் தன்னை முழுமனதோடு ஒப்புக் கொடுத்தவனே கிறிஸ்தவன். அந்நிபந்தனைகளே, மனந்திரும்புதலும், விசுவாசமுமாகும். அவற்றை நான் இரட்சிப்பாகிய கதவைத் திறக்கும் இரும்புப்பலகைக்கு ஒப்பிட விரும்புகிறேன். அவ்விரும்புப்பலகையின் ஒருபுறம் வீட்டுச்சுவற்றில் பொருத்தப்பட்டிருக்கிறது. மறுபுறம் கதவில் பொருத்தப்பட்டிருக்கிறது. இரும்புப்பலகையில் நடுவில் இருக்கும் ஆணி கதவை வீட்டுச்சுவற்றோடு இணைத்து அதைத்திறக்க உதவுகிறது. கிறிஸ்துவே அக்கதவாக இருக்கிறார். ஆனால், கிறிஸ்துவுக்குள் மனந்திரும்பி, விசுவாசிக்காமல் எவருமே உள்ளே நுழைய முடியாது.

எந்த இரும்புப்பலகையும் ஒரு பக்கத்தோடு மட்டும் செய்யப்படுவதில்லை. ஆகவே, மனந்திரும்புதல் மட்டும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

**பாப்திஸ்து பெரியோர்களின் ஒருவரான பனியனைப் பற்றிக் கேள்விப்படாதவர்கள் இருப்பது அரிது. இளைய தலைமுறையும் அவரைப்பற்றி அறிந்து கொள்ள இக்கட்டுரைச் சுருக்கம் உதவும்.**

# ஜோன் பனியன்



இவ்விதழின் அட்டையை அலங்கரிப்பவர் ஜோன் பனியன். வரலாற்றுக் கிறிஸ்தவத்தின் நாயகர்களின் பலரை அநேகருக்கு தெரியாமலிருந்தாலும் பனியனைப் பற்றி அறிந்திருக்கவே செய்கிறார்கள். இதற்கான காரணத்தையும் சுலபமாகக் கூறிவிடலாம். அதற்கு பனியனின் மோட்ச பயணம் நூலே காரணம். சீர்திருத்தவாத, பியூரிடன் போதகர்களில் இவரை முதன்மையானவராகக் கருதலாம்.

ரிச்சர்ட் பெக்ஸ்டர் கிடர்மின்ஸ்டரில் போதகராகப் பிரசங்கம் செய்து கொண்டிருந்த நாட்களில் கர்த்தர் பனியனின் உள்ளத்தைத்தொட்டு மனந் திரும்பும் அனுபவத்தை அவருக்கு அளித்தார். அவ்வனுபவம் அவரை தேவனிடத்தில் கொண்டு வந்தது மட்டுமல்லாமல் கிறிஸ்துவைப்பற்றிப் பிரசங்கித்து பலரது உள்ளத்தையும் தொடும் ஊழியத்திற்கும் அழைத்து வந்தது. பனியனின் உள்ளத்தை உலுக்கும் பிரசங்கத்தைப் பற்றிப் பேசும்போது, பியூரிட்டன்களின் இளவரசர் என்று அழைக்கப்படும் ஜோன் ஓவன், அதைப் பெறுவதற்காக எனது எல்லா அறிவையும் நான் விருப்பத்தோடு இழக்கவும் தயார் என்று கூறியிருக்கிறார்.

பனியன் 1628 ஆம் ஆண்டு, இங்கிலாந்தில் பெட்போர்டிற்கு அருகில் இருந்த எல்ஸ்டவ் என்ற இடத்தில் பிறந்தார். அவருடைய பெற்றோர்கள் சொந்தமாக வீடு வைத்திருந்ததோடு, பனியனைப் பாடசாலைக்கும் அனுப்பி வைத்தனர். அங்கே எழுதப்படிக்கக் கற்றுக் கொண்ட பனியன் தனது இளமைக்காலம் முழுவதையும் வீணான பாவ வழிகளிலேயே செலவிட்டார். தான் எழுதிய Grace Abounding to the Chief of Sinners என்ற நூலில் இதைக்குறித்து பனியன் விபரமாக எழுதியுள்ளார். கர்த்தர், பனியன் தனது பாவங்களின் கோரத்தைப் பார்க்கும் அனுபவத்திற்குள்ளாக அவரைக் கொண்டு சென்றார். நரகத்தின் அவலத்தை அனுபவபூர்வமாகத் தன் வாழ்வில் கண்டு கொண்ட பனியன் அதன் கோரத்தில் இருந்து விடுபட்டு, தேவனில் அதிக பலத்தைப் பெற்றார்.

இவ்வனுபவத்திற்குப் பிறகு உள்நாட்டுப்போரில் போர்ச்சேவகனாக கலந்து கொண்டார் பனியன். அதில் அற்புதமாக உயிர் தப்பி பின்பு தன் தந்தையோடு ஒட்டு வேலை செய்பவராக ஊர் ஊராகப் போய்வந்தார். அதன் பின் வெகு சீக்கிரத்திலேயே அவருக்கு மணமாயிற்று. அவரது முதலாவது மனைவியோடு வாழ்ந்த காலத்தில் பனியன் ஆலயத்திற்கு செல்ல ஆரம்பித்தார். தன் மனைவி வைத்திருந்த இரு ஆவிக்குரிய நூல்களை அவரோடு சேர்ந்து வாசித்து அதுபற்றி விவாதித்திருக்கிறார். இருந்தபோதும் அதில் அவ்வளவாக அப்போது அவருக்கு ஆர்வம் இருக்கவில்லை. ஆனால், இவையெல்லாம் விரைவிலேயே மாற ஆரம்பித்தன.

1650 ஆம் ஆண்டில் ஆலயத்தில் பனியன் கேட்ட தேவ செய்தி அவரது பாவத்தை அவருக்கு உணர்த்தியது. இக்காலங்களில் வேறு பலரோடு சேர்ந்து களியாட்டங்களில் காலத்தைச் செலவிட்டுக் கொண்டிருந்த பனியனின் மனதைக் கேட்ட செய்தி உறுத்தியது. அதை மனதிலிருந்து எடுத்தெறிந்துவிட்டு கிராமப்புறத்திற்கு விளையாடச் சென்றார் பனியன். அப்போது தேவ செய்தி, சடுதியாக அவரது காதைத்துளைத்தது. “உன்னுடைய பாவங்களைத் துறந்துவிட்டு நீ பரலோகத்திற்குப் போகப் போகிறாயா அல்லது உன் பாவங்களோடு நரகத்தில் மாளப்போகிறாயா?” என்ற கேள்வி அவரை உலுக்கியது. ஆனால், எனக்குப் பாவ மன்னிப்பு கிடைக்காது என்று கூறி அக் கேள்வியை உதறித்தள்ளிவிட்டு மேலும் பாவ

வாழ்க்கைக்குத் தன்னை பனியன் அர்ப்பணித்தார். கர்த்தரிடம் அவர் வந்த அனுபவத்தை சுருக்க மாகக் கூறுவதானால் பனியன் தன் வாழ்வில் சில வருடங்கள் பாவத்தின் கோரத்தை உணர்ந்து அதனால் துன்பப்பட நேரிட்டது. இறுதியில் வேதத்தை வாசித்து, ஆராய்ந்து அதில் மன ஆறு தலையும் அடைந்த பனியன், கில்போர்ட் என்ற ஒரு போதகரின் பிரசங்கத்தின் மூலம் இறுதியாக இரட்சிப்பின் நிச்சயத்துவத்தைப் பெற்றுக் கொண் டார். அதற்குப் பின்பும் வாழ்க்கையில் இருளான அனுபவங்களை அடைந்த பனியன் அதிலிருந் தெல்லாம் விடுபட்டு திருச்சபையிலும் அங்கத்து வத்தைப் பெற்றுக் கொண்டார்.

பனியனின் அனுபவங்களைப் பார்க்கும்போது, அவர் அடைந்த அனுபவங்களை எல்லோரும் பெற வேண்டும் என்று எண்ணிவிடக்கூடாது. இவ்விதத்தில் வாழ்க்கையில் தங்களுடைய பாவங்களை உணர்ந்து அதற்காக சிலர் சில காலம் வருந்தி, துன்பப்பட்டுப் பின்பு தேவனை அடைந்த வரலாறு உண்டு. ஆனால், எல்லோருமே ஒரேவித மாகத் தேவனிடத்தில் வருமதுமில்லை; ஒரேவித மாக இவ்வனுபவங்களைப் பெற்றுக்கொள்வது மில்லை. பாவத்தைப் பற்றிய எந்தவிதமான குற்ற உணர்வுமின்றி, வெறும் தீர்மானத்தை மட்டும் எடுத்துவிட்டு கர்த்தரை அறிந்து கொண்டேன் என்று பாட்டுப் பாடும் கூட்டம் மிகுந்த இந்நாட் களில் பனியனின் அனுபவங்கள் நம் எல்லோருக் குமே ஒரு பாடமாக இருப்பதோடு, அத்தகைய அனுவத்தை அடைய நேரிட்டவர்களுக்கு மன ஆறுதலை அளிப்பதாகவும் உள்ளது.

கர்த்தர் பனியனுக்கு தன்னை அறிந்து கொள்ளும் அனுபவத்தை மட்டும் கொடுக்காமல், போதிக்கும் ஆற்றலையும் தந்து ஊழியத்தில் பயன்படுத்தினார். 1658 ஆம் ஆண்டு, ஒலிவர் குரொம்வெல் இவ் வுலகைவிட்டு மறைந்த வருடத்தில், பனியனின் முதலாவது நூல் பற்றிய அறிவிப்பு பத்திரிகையில் வெளிவந்தது. 1660 இல் மறுபடியும் அரசாட்சி இங்கிலாந்தில் ஏற்படுத்தப்பட்டபோது பிரசங்கம் செய்வதற்கு தடைவிதிக்கப்பட்டது. தடையை மீறி பிரசங்கித்த பனியன் சிறையில் தள்ளப்பட்டார். இக்காலத்தில் பனியனின் முதல் மனைவி மறைந்த தால், அவர் இரண்டாம் திருமணம் செய்திருந்தார். பனியனின் சிறைவாசம் குடும்பத்தைப் பாதித்தது. ஆனால், பனியன் போதகராக இருந்த பெட் போர்ட் சபை அவரது குடும்பத்தின் தேவைகளைக் கவனித்துக் கொண்டது.

பனியன் சிறையில் படிப்பிலும், எழுத்திலும் காலத்தை செலவிட்டார். அநேக நூல்களை அவ ரால் சிறையில் வாசிக்க முடிந்தது. 1660 க்கும் 1666 க்கும் இடைப்பட்ட காலத்தில் அவர் அநேக துண்டுப்பிரசுரங்களை எழுதி வெளியிட்டதோடு ஒன்பது நூல்களையும் எழுதி வெளியிட்டார். இவற்றில் ஒன்றே Grace Abounding என்ற நூலா கும். 1672 ல் பனியன் இறுதியில் நீண்ட சிறை வாசத்தில் இருந்து விடுதலை அடைந்து போதக ஊழியத்தில் மறுபடியும் ஈடுபட்டார். 1675 ல் அவர் மறுபடியும் ஒரு வருடத்தை சிறையில் செலவிட நேரிட்டது. இக்காலத்திலேயே மோட்ச பயணத்தின் முதலாவது பாகத்தை அவர் எழுதி வெளியிட்டார். 1684 ல் அதன் இரண்டாம் பாகத்தை பனியன் வெளியிட்டார். முதலாவது பாகம் பத்து வருடத் தில் பதினொரு பதிப்புகளைச் சந்தித்து பலரின் பாராட்டையும் பெற்றது. அதுமட்டுமல்லாமல் ஒல்லாந்து, ஜெர்மானிய, பிரெஞ்சு மொழிகளிலும் அது வெளியிடப்பட்டது.

இன்றைய கிறிஸ்தவ இலக்கியங்கள் அனைத்தையும் எடுத்துக்கொண்டால் அதில் பனியனின் மோட்ச பயனம் நிச்சயமாக முதலிடத்தைப் பெறும் என்ப தில் எந்தவித சந்தேகமுமில்லை. இதில் பனியனின் இறையியலை முழுமையாகக் காணலாம். கிறிஸ்தவ வாழ்க்கையை சாதாரணமானதாக எண்ணி அலட் சியத்தோடு வாழ்ந்து கொண்டிருப்பவர்கள், கிறிஸ் தவ வாழ்க்கை என்றால் என்ன? என்பதை பனிய னின் மோட்ச பயணத்தை வாசித்து அறிந்து கொள்ள வேண்டும். கிறிஸ்தவ வாழ்க்கையில் ஏற்படக்கூடிய அத்தனை அனுபவங்களையும் கிறிஸ்தியான் மற்றும் பல பாத்திரங்கள் மூலம் அழகாக பனியன் படம் பிடித்துக் காட்டியுள்ளார். இவையனைத்தையும் கனவில் நடப்பது போல் காட்டியிருக்கும் பனியன், பியூரிட்டன் போதனைக ளனைத்தையும் சிறப்பாக எழுத்தில் வடித்துத் தந்திருக்கிறார்.

வேதத்திற்கு அடுத்தபடியாக மோட்ச பயணம் அநேக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளி யிடப்பட்டுள்ளது. இந்திய மொழிகள் பலவற்றில் இது வெளிவந்திருப்பதோடு தமிழிலும் தொடர்ந்து பிரசுரிக்கப்படுகிறது. போதகர்களும், கிறிஸ்தவ பெற்றோர்களும், பிள்ளகளும், இளைஞர்களும் தவறாது வாசித்துப்பயன்பெற வேண்டிய நூல் மோட்ச பயணம். எனது கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆரம்ப காலத்தில் வேதத்திற்கு அடுத்தபடியாக நான் முதன் முதலாக வாசித்த கிறிஸ்தவ இலக்கி யம் மோட்ச பயணமே. தமிழில் அருமையான நூல்கள் இல்லை என்ற குறையை நிச்சயம் பனிய னின் மோட்ச பயணம் தீர்த்துவைத்து ஆறுதல் அளிக்கிறது. கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்க்கையில் உரம் பெற இதைத் தவறாது வாசிக்க வேண்டும்.

சிறைவாசத்திற்குப் பின்னர் 1672 ல் பனியன் போதக ஊழியத்தில் ஈடுபட்டிருந்த சபை ஒரு மாட்டுக் கொட்டகையிலேயே கூடியது. இறக்கும் வரையிலும் இங்கேயே பனியன் பிரசங்கித்தார். தனது சபைக்கு மட்டுமல்லாது பிரட்போர்டிலும் அதைச் சுற்றி இருந்த பகுதிகளின் சபைகளுக்கும், பிரசங்கிகளுக்கும் பனியன் அநேக உதவிகளை செய்தார். இதனால் அவரை “பிசப் (Bishop) பனியன்” என்றும் அழைத்தார்கள். சாதாரன மனிதர்கள் முதல், படித்தவர்களும் அவரது பிரசங்கத்தால் ஆசீர்வாதமடைந்தார்கள். தனது இறுதி நாட்களில் பனியன் மேலும் ஆறு நூல்களை எழுதி வெளியிட்டதோடு வெளியிடப்படாத அநேக நூல்களையும் விட்டுச் சென்றார். 1688 ஆம் ஆண்டு பனியன் இறையடி சேர்ந்தார்.

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

போதாது. விசுவாசத்தைக் கொண்டிராத மனந்திரும்புதல் வேதபூர்வமான மனந்திரும்புதல் இல்லை. அது உங்களையும், உங்களுடைய பாவத்தையும் சார்ந்ததாக உள்ளது. அதேபோல், விசுவாசத்தை மட்டும் கொண்டுள்ள இரும்புப்பலகையையும் பார்க்க முடியாது. மனந்திருமபுதலோடு இணைந்து காணப்படாத எந்த விசுவாசமும் மெய்யான விசுவாசம் அல்ல. ஏனெனில், மெய்யான விசுவாசம், பாவத்திலிருந்து விடுபட கிறிஸ்துவுக்குள் எம்மை இரட்சிக்கும் விசுவாசமேயல்லாது, பாவத்தோடு எம்மை இரட்சிக்கும் விசுவாசமல்ல. மனந்திரும்புதலும், விசுவாசமும் பிரிக்கமுடியாதபடி ஒன்றரக்கலந்தவை, எனவேதான் வேதமும், "நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லோரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்" (லூக்கா 13:3) என்று சொல்கிறது. இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைபவர்களின் பட்டியலில் (வெளி. 21:8) அவிசுவாசிகளும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

**4. வேதபூர்வமான கிறிஸ்தவன், தான் மெய்யாகவே மனந்திரும்பி விசுவாசத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறேன் என்பதை நடைமுறையில் தன் வாழ்க்கையில் வெளிப்படுத்துவான்.**

மனிதர்கள் மனந்திரும்பி தேவனை நாடி, தமது மனந்திரும்புதலுக்கு ஏற்ற கிரியைகளைத் தங்கள் வாழ்க்கையில் செய்ய வேண்டும் என்று பவுல் பிரசங்கம் செய்தார் (அப்போஸ். 26:20). அத்தகைய கிரியைகள் விசுவாசிகளின் வாழ்க்கையில் இருக்க வேண்டும் என்று தேவனும் எதிர்பார்க்கிறார். "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல; ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்" (எபேசியர் 2:8-10).

**கிறிஸ்துவுக்குள்ளான மெய்யான விசுவாசம் எங்கிருக்கிறதோ, அங்கே கிறிஸ்துவின் மேலுள்ள மெய்யான அன்பு விதைக்கப் பட்டிருக்கும். எங்கே கிறிஸ்துவின் மேல் அன்பு செலுத்தப்படுகிறதோ, அங்கே கிறிஸ்துவுக்குள்ளான கீழ்ப்படிவும் இருக்கும்.**

பவுல் காலத்தியர் 5 இல், விசுவாசம் அன்பினால் கிரியை செய்கிறது என்று சொல்கிறார். கிறிஸ்துவுக்குள்ளான மெய்யான விசுவாசம் எங்கிருக்கிறதோ, அங்கே கிறிஸ்துவின் மேலுள்ள மெய்யான அன்பு விதைக்கப் பட்டிருக்கும். எங்கே கிறிஸ்துவின் மேல் அன்பு செலுத்தப்படுகிறதோ, அங்கே கிறிஸ்துவுக்குள்ளான கீழ்ப்படிவும் இருக்கும். "என் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், . . .என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ள மாட்டான்" (யோவான் 14:21–24) என்று இயேசு சொல்கிறார். நாம் கிறிஸ்துவை விசுவாசிப்பதனாலேயே இரட்சிக்கப்படுகிறோமே தவிர, அவருக்குக் கீழ்ப்படிவதனால் அல்ல. ஆனால், கிறிஸ்துவுக்குள் அன்பையும், கீழ்ப்படிவையும் ஏற்படுத்தாத விசுவாசம் மெய்யான இரட்சிக்கும் விசுவாசமாக இருக்க முடியாது.

மெய்யான விசுவாசம் அன்பை உள்ளடக்கியதாக இருக்கும். அத்தகைய அன்போடு கூடிய விசுவாசத்தைக் கொண்டவன், வெளியில் அமர்ந்து, அழகான நட்சத்திரங்களோடு சுடர்விட்டுக் கொண்டிருக்கும் விண்ணைப் பார்த்து, தான் கிறிஸ்தவனாக இருப்பது எத்தனை பெருமைதரும் காரியம் என்று பாட்டெழுதிக் கொண்டிருக்க மாட்டான். மெய்யான விசுவாசி தன் வீட்டுக்குத் திரும்பிப்போய், தனது பெற்றோருக்குக் கீழப்படிவான்; அல்லது தன் மனைவி மீது அன்பு செலுத்துவான்; தனது பிள்ளைகளின் மேல் பாசத்தைக் கொட்டுவான்; தனது வேலைத்தளத்தில் எத்தனை எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் நீதிக்கும், நியாயத்திற்குமாக வாதாடுவான்; மொத்தமாகக் கூறப்போனால் வேதம் எதைச் சொல்கிறதோ அதைச் செய்வதையே வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டிருப்பான்.

நித்தியமான, மாறாத, ஒழுக்கக் கட்டுப்பாடுகள் இருக்கின்றன என்று விசுவாசிப்பதால், ஒரு விசுவாசி மற்றவர்கள் தன்னை முட்டாள், மூளை இல்லாதவன், காலத்துக்கு உதவாத பத்தாம் பசலி என்று கருதுவதைப் பொருட்படுத்த மாட்டான். வேதம் போதிக்கும் மனித வாழ்க்கையின் முக்கியத் துவத்திற்கு அவன் மதிப்புக் கொடுப்பதால், மனமுடிக்குமுன் எந்தப் பெண்ணோடும் தவறான உடலுறவு கொள்ளுவதற்கு எதிராகவும், கருத்தடை செய்வதற்கு எதிராகவும் துணிந்து பேசுவான். இயேசு, "விபச்சாரமும், பாவமும் உள்ள இந்தச் சந்ததியில் என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படுவானோ, அவனைக் குறித்து மனுஷகுமாரனும் தமது பிதாவின் மகிமை பொருந்தினவராய்ப் பரிசுத்த தூதர்களோடுங்கூட வரும்போது வெட்கப்படுவார்" (மாற்கு 8:38) என்று சொல்கிறார்.

வேதபூர்வமான கிறிஸ்தவன் யார்? என்ற கேள்விக்கு பதில் வேண்டுமானால், வெறுமனே, "ஆம், நான் ஒரு பாவி" என்று எனக்குப் புரிகிறது என்றோ, அல்லது, "என்னைப் பற்றி ஒரு குற்றப்பத்திரிகையும், எனக்குள் கேடான இருதயமும் இருப்பது எனக்குத் தெரியும், சிலுவையில் மரித்த இயேசுவில் மட்டுமே பாவிகளின் பாவநிவாரணத்திற்கு வழி இருக்கிறது என்பதும் எனக்குத் தெரியும், அதனைத் தேவன் மனந்திரும்பி விசுவாசிக்கிறவர்களுக்கு மட்டுமே தருகிறார்" என்றோ கூறுவது மட்டும் போதாது.

நீங்கள் மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசிக்கிறீர்களா? அப்படி, மனந்திரும்பி கிறிஸ்துவை நீங்கள் விசுவாசிப்பீர்களேயானால், அவ்விசுவாசம் நிலைத்திருக்கும்படி உறுதி

யோடு, இயேசு கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிந்து வாழ்கிறீர்களா?

“பரலோகத்திலிருக்கிற என் பரம பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக இராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி, கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்கிறவன் பிரவேசிப்பதில்லை” (மத்தேயு 7:21) என்று இயேசு சொல்லியிருக்கிறார். எபிரேயர் நிருபத்தை எழுதியவர், “இயேசுவைக்குறித்து, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணர்” என்று கூறுகிறார் (எபிரேயர் 5:9). யோவானும், “அவரை அறிநதிருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை” என்று கூறுகிறார் (1 யோவான் 2:4).

நீங்கள் கிறிஸ்தவன் என்று உங்களை அழைத்துக் கொண்டால் அதை வேதத்திலிருந்து உங்களால் நிரூபிக்க முடியுமா? விசுவாசத்திற்கும், மனந்திரும்புதலுக்குமான கனிகளை உங்கள் வாழ்க்கையில் காண முடிகின்றதா? கிறிஸ்துவை அறிக்கையிட்டு, அவரோடு இணைந்து, அவருக்குக்கீழப்படிந்து வாழும் வாழ்க்கையைக் கொண்டிருக்கிறீர்களா? உங்களுடைய வாழ்க்கை கிறிஸ்துவின் வழிகளுடன் ஒத்துப்போகின்றதா? இப்படியெல்லாம் கேட்பதனால், பரிபூரணமான வாழ்க்கை வாழ்கின்றீர்களா என்று நான் கேட்பதாக நீங்கள் நினைத்துவிடக்கூடாது. இயேசுவே கூறியிருப்பதுபோல், ஒவ்வொரு நாளும், எங்கள் கடனாளிகளுக்கு நாம் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும் என்று நீங்கள் ஜெபம் செய்ய வேண்டும். அதேவேளை, நான் கிறிஸ்துவுக்காகவே வாழ்வேன் என்றோ, அல்லது,

> இயேசு, நான் என் சிலுவையை சுமந்தேன்
> அனைத்தையும் துறந்து உம் பின்னால்
> போவதற்கே.

என்ற மேல்வரும் கீர்த்தனை கூறுவதுபோலவும் கூற வேண்டும்.

மெய்க்கிறிஸ்தவன் கிறிஸ்துவை பின்பற்றுவான். உங்களில் எத்தனைபேர் வேதபூர்வமான மெய்க்கிறிஸ்தவர்கள்? உங்களுடைய ஆழமான மனதுக்குள்ளேயே நீங்கள் இக்கேள்விக்கு விடை கொடுக்கும்படி விட்டுவிடுகிறேன்.

ஆனால், ஒன்றை மற்றும் மறந்துவிடாதீர்கள். இதற்கு நீங்கள் பதிலளிக்கும்போது உங்களோடு நித்தியத்திற்கும் நிலைத்து நிற்கும்படியான பதிலைக் கொடுக்கப் பாருங்கள். மரணத்தைச் சந்திக்கும்போது ஆறுதலைத் தரக்கூடியதும், நியாயத்தீர்ப்பு நாளில் பாதுகாப்பைத் தரக்கூடியதுமான பதிலைத்தவிர வேறு எதற்கும் உங்களை ஒப்புக்கொடுத்துவிடாதீர்கள்.

## இணையத்தில் “திருமறைத்தீபம்”



*திருமறைத்தீபம் இவ்வருட ஆரம்ப முதல் இணையத்தில் (Internet) ஒளிவிட ஆரம்பித்துள்ளது. பத்திரிகையைத் தவிர மற்றும் நற்செய்தி, கட்டுரைகள், நூல்கள் ஆகிய வற்றையும் அதில் வெளியிட முயன்று வருகின்றோம். கணனி (Computer) வசதியுள்ளவர்கள் www.biblelamp.org என்ற இணைய முகவரியில் பத்திரிகையையும் வேறு பல ஆக்கங்களையும் வாசிக்கலாம். இணையத்தின் மூலமும் சத்துள்ள போதனைகள் தமிழ் பேசும் கிறிஸ்தவ அன்பர்களைச் சென்றடைந்து, அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்பதே இப்பணியில் ஈடுபட்டுள்ளோரின் வாஞ்சை. மின்பொறியுகமான இக்காலத்தில் இச்சிறு முயற்சியும் கர்த்தரின் இராஜ்ய வளர்ச்சிக்குப் பயன்பட்டு, அவருக்கு மகிமை சேர்க்க எம்மோடு சேர்ந்து ஜெபியுங்கள்.*

2

## *1689 விசுவாச அறிக்கை*

# பரிசுத்த வேதாகமம்

**ஜோன் ரூத்தர்**

கடந்த இதழில் 1689 ஆம் ஆண்டில் நமது சீர்திருத்தவாத முன்னோர்களால் வெளியிடப்பட்டு, இன்றுவரை பயன்படுத்தப்பட்டு வரும் விசுவாச அறிக்கையின் முதல் அதிகாரத்தின் மூன்று பாராக்களையும் அது பற்றிய விளக்கத்தையும் பார்த்தோம். அதைப்படிக்கும்போது இம்முதல் அதிகாரம் நமது கிறிஸ்தவ விசுவாசத்திற்கு எத்தனை அவசியமானது என்று புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். இனித்தொடர்ந்து ஏனைய பாராக்களையும் அவற்றிற்கான விளக்கங்க்ளையும் பார்ப்போம்.

***பாரா 4.*** *பரிசுத்த வேதாகமத்தின் அதிகாரம் எந்த ஒரு மனிதனிலோ அல்லது சபையின் சாட்சியிலோ தங்கியிராமல் அதன் ஆக்கியோனாகிய உண்மையுள்ள கடவுளை முழுமையாக சார்ந்துள்ளது. அது கடவுளின் திருவார்த்தையாக இருப்பதால் அதற்கு நாம் அடிபணிதல் வேண்டும்.*

*1 தெசலோ. 2:13; 2 தீமோ. 3:16; 2 பேதுரு 1:19-21; 1 யோவான் 5:9.*

***பாரா 5.*** *திருச்சபையினுடைய சாட்சியினால் உந்தப்பட்டு நாம் பரிசுத்த வேதாகமத்தைப்பற்றிய ஓர் உயர்வான மரியாதைக்குரிய எண்ணத்தைக் கொண்டிருக்கலாம். அதன் உள்ளடக்கங்களின் தெய்வீகத்தன்மை, அதன் போதனைகளின் நற்பயன், அதன் மான்புமிக்க தன்னியல்பு, ஆரம்பம் முதல் இறுதிவரை எல்லாப் பகுதிகளும் என்றோடொன்று ஒத்துப் போகும் தன்மை, எல்லா வகையிலும், எல்லா மகிமையையும், தேவனுக்கே கொடுக்கும் அதன் மாட்சி, இரட்சிப்புக் குரிய ஒரே வழிமுறையைக்குறித்த அதன் முழுமை யான வெளிப்படுத்தல், அத்தோடு, அதனுடைய இன்னும் அநேக உயர்ந்த தன்மைகளும், முழுமை யான பூரணத்துவமும், அது தேவனுடைய திருமறை தான் என்று நிரூபிக்கும் அளவற்ற சாட்சியங்களை நமக்கு அள்ளித் தருகின்றது. ஆயினும், தவறிழைக்க வியலாத* (Infallible) *திருமறையின் இத்தெய்வீக அதிகாரத்தைக் குறித்த முழு நம்பிக்கையையும் விசுவாசத்தையும், பரிசுத்த ஆவியானவர் திருமறை யின் மூலம் நமது இருதயத்தில் ஏற்படுத்தும் சான்றினாலும், நம்மில் நடப்பிக்கின்ற செயலின் மூலமும் மட்டுமே அனுபவிக்க முடியும்.*

*யோவான் 16:13-14; 1 கொரி. 2:10-12; யோவான் 2:20, 27.*

**விளக்கவுரை:**

**இ. வேதத்தின் அதிகாரமும், ஆவியின் சாட்சியும் (4, 5).**

**1. வேதத்தில் நமது நம்பிக்கை**

**அ. வேதம் எந்த ஒரு மனிதனின் சாட்சியிலோ அல்லது சபையின் சாட்சியிலோ தங்கியிருக்கவில்லை.**

**ஆ. அது கர்த்தரின் அதிகாரத்தில் மட்டுமே தங்கியுள்ளது - ஏனெனில் அது கர்த்தரின் வார்த்தை.**

**2. வேதம் கர்த்தரின் வார்த்தை என்பதற்கான சாட்சியங்கள்.**

**அ. திருச்சபை, வேதம் கர்த்தரின் வார்த்தை என்று சாட்சி பகர்கின்றது.**

**ஆ. திருச்சபை, நாம் வேதத்திற்கு உயர்ந்த இடத்தை அளிக்க அளிக்க நம்மை ஊக்குவிக்கிறது,**

**3. ஆவியின் சாட்சியால் விசுவாசி வேதத்தில் அதிக நம்பிக்கையும், நிச்சயத்துவத்தையும் அடைதல்.**

இரண்டு காரணங்களுக்காக இப்பாராக்கள் மிக முக்கியமானவை. முதலாவதாக, வரலாற்றுக் காரணங்களுக்காக இவை முக்கியமானவை. ரோமன் கத்தோலிக்க மதம், வேத்தின் அதிகாரத்தில் நமக்கிருக்க வேண்டிய உறுதி கத்தோலிக்க திருச்சபை அளிக்கும் சாட்சியத்திலேயே தங்கியிருப்பதாகப் போதிக்கிறது. அதாவது, வேதத்தைக் கர்த்தருடைய வார்த்தை என்று நம்புகிறவர்கள் அப்படி செய்வதற்குக் காரணம், அவர்கள் ரோமன் கத்தோலிக்க சபையை நம்புவதால்தான், என்பது அவர்களுடைய போதனை.

இரண்டாவதாக, ஏன் வேதமே இறுதியானதும், முடிவானதுமான அதிகாரத்தை நம் வாழ்க்கையில் கொண்டிருக்

கின்றது என்பதை நாம் புரிந்து கொள்வதற்காக இப் பாராக்கள் முக்கியமானவை. இப்பாராக்கள் நமது தனிப்பட்ட வாழ்க்கையிலும், குடும்ப வாழ்க்கையிலும், சபை வாழ்க்கையிலும், சமூக வாழ்க்கையிலும் எந்த அடிப்படையில் வேதத்திற்கு அதிகாரம் இருக்கின்றது என்பதை எடுத்து விளக்குகின்றன.

மேலே தரப்பட்டுள்ள, சுருக்கக்குறிப்பை மீண்டும் பார்ப்பீர்களானால், அங்கே, விசுவாசமும், வேதத்திற்கு அடிபணிதலும் நமது கடமையாக எதிர்பார்க்கப்படுவதைப் பார்க்கலாம். வேதம் கர்த்தரின் வார்த்தையாக இருப்ப தாலேயே அதை நாம் நம்புகிறோம். அதேவேளை, அவ்வேதமே தான் கர்த்தரின் தவறிழைக்கவியலாத வார்த்தை என்பதற்கான சாட்சியங்களையும் தருவதால் அதை நாம் நம்புகிறோம். இங்கே, விசுவாசத்திற்கும், சாட்சிகளுக்கும் எந்தவிதமான முரண்பாடும் இருக் கிறதா என்று பாருங்கள்? ஆனால், அப்படியொரு முரண்பாடிருப்பதுபோல் சிலர் காட்ட முயல்வர். விசுவாச அறிக்கையோ விசுவாசத்திற்கும், சாட்சிகளுக்கும் இடையில் இருக்கும் சமநிலையை அழகாக விளக்குகிறது.

நாம், வேதம் தேவனின் சித்தத்தை வெளிப்படுத் தும் அவரது வார்த்தை என்று நம்புகிறோம். ஆனால் இதை நாம் எப்படி நம்ப முனைந் தோம்? உண்மையில் எல்லோருமே வேதத்தை நம்பி அதன் போதனை களைக் கேட்டு நடுங்கு வதில்லை (ஏசாயா 66:2). விசுவாச அறிக்கை 2 தெயலோனிக்கேயர் 2:13 ஐச்சுட்டிக் காட்டுகின்றது. நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப் படுகிறதனாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும்படிக்கு, ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்து கொண்டபடி யினாலே நாங்கள் உங்களைக் குறித்து எப்பொழுதும் தேவனை ஸ்தோத்தரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். தேவன் எம்மைத் தெரிந்து கொண்டிருப்பதனாலும், அவரையும் அவரது வார்த்தையையும் விசுவாசிக்கும் படியாக நமக்கு விசுவாசத்தைத் தந்திருப்பதனாலும் வேதத்தை நாம் நம்புகிறோம். தேவனால் தெரிந்து கொள்ளப்படாமல் எவரும் அவரையோ, அவரது வார்த்தையையோ நம்ப முடியாது.

**வேதம் வெறும் கட்டுக்கதை என்றும், மனிதனுடைய எண்ணங்களின் தொகுப்பு என்றும் கூறி அதை மனிதர்கள் நம்ப மறுப்பதால் அதன் அதிகாரம் எந்தவிதத்திலும் குறைந்துவிடப்போவதில்லை. ஒருவருமே அதை நம்பாவிட்டாலும் அது தொடர்ந்து தேவனின் அதிகாரமுள்ள வார்த்தையாகவே இருக்கிறது.**

வேதம் வெறும் கட்டுக்கதை என்றும், மனிதனுடைய எண்ணங்களின் தொகுப்பு என்றும் கூறி அதை மனிதர்கள் நம்ப மறுப்பதால் அதன் அதிகாரம் எந்த விதத்திலும் குறைந்துவிடப்போவதில்லை. ஒருவருமே அதை நம்பாவிட்டாலும் அது தொடர்ந்து தேவனின் அதிகாரமுள்ள வார்த்தையாகவே இருக்கிறது. ஆனால், தேவனால் தெரிவு செய்யப்பட்டு வேதத்தை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தைக் கொண்டிருப்ப தனாலேயே பலர் அதனை நம்பி ஏற்றுக் கொள்ளுகின்ற னர் (1 கொரி. 2:10-12). யோவான் 6:29 இல் இயேசு, "அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது" என்று கூறுகிறார். சத்தியமே உருவாயுள்ள தேவனிலேயே வேதத்தின் அதிகாரமும், இயேசுவின் வார்த்தைகளின் அதிகாரமும் தங்கியுள்ளது. வேதம் தேவனின் வார்த்தையாக இருப்பதாலேயே அதை நாம் விசுவாசிக்க வேண்டும் என்று விசுவாச அறிக்கையின் நான்காம் பாரா கூறுகிறது. சில வேளைகளில் நாம் வேதத்தை நம்பாமல் போகக்கூடும். வேதப்பிரசங்கங்களைக் கேட்கும் போதும், வேதத்தை வாசித்து அதன் போதனைகளைத் தெரிந்து கொள்ளும் போதும் அவற்றை நம் மனம் ஏற்றுக் கொள்ளத் தயங்கக்கூடும். ஆனால், அச்சூழ்நிலை களிலும் நாம் வேதத்தை நம்ப வேண்டும். பவுல் 1 தெசலோ. 2:13 இல் தெசலோனிக்கேயரைப் பற்றி, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக் கொள்ளாமல், தேவ வசனமாகவே ஏற்றுக் கொண்டீர்கள் என்று கூறியிருப்பதுபோல், நாமும் இருக்க வேண்டும்.

ஆனால், விசுவாச அறிக்கையின் ஐந்தாம் பாரா, நாம் வேதத்தை தேவவசனமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வேதம் கட்டளையிடுகிறது என்று மட்டும் கூறி நிறுத்திவிடாமல், நாம் விசுவாசித்துக் கீழ்ப் படியும்படியாக வேதம் அதற்கான சான்றுகளை யும் தருகிறது என்று கூறுகின்றது. வேதத் திற்கு நாம் நமது வாழ்வில் மிக உயர்ந்த இடத்தை அளிக்கும்படி திருச்சபை அச்சான்று களுக்கான சாட்சி பகருகின்றது. வேதத் திற்கு நாம் மிகுந்த மதிப்பளிக்க வேண்டும் என்பதற்காகக் கொடுக் கப்பட்டுள்ள, பல காரணங்களை இப்பாராவில் நாம் வாசிக்கிறோம். அவை ஒவ்வொன்றையும் இப்போது சிறிது விளக்கமாகப் பார்ப்போம்.

**அ. அதன் உள்ளடக்கங்களின் தெய்வீகத்தன்மை -**

யோவான் 3:12 இல் இயேசு நிக்கொதேமுவைப்பார்த்து, "பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லி யும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரம காரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்?" என்று கேட்டார். பரம காரியங்களைப் பற்றியே முழு வேதமும் பேசுகிறது. பரலோகத்தை நெருங்கவும், இறுதியில் அதை அடையவும் நாம் விரும்பினால், வேதம் போதிக்குபடி நாம் வாழ்ந்து, பரலோகத்தைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு வாழ்வது பரலோகம் இவ்வுலகிற்கு வந்தது போலாகும். வேதத்தை நான் மேலும் மேலும் படிக்கும் போது, சாதாரண மனிதன் அதை எழுதி, அதன் புத்தகங்களைத் தொகுத்திருக்க முடியாது என்பதில் எனக்கு அதிக நிச்சயம் ஏற்படுகிறது.

**ஆ. அதன் போதனைகளின் நற்பயன் -**

இதன் மூலம் விசுவாச அறிக்கை வேதத்தின் நோக்

கத்தையும், அதன் வல்லமையையும் சுட்டிக் காட்டுகின்றது. "விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பலனாயிருக்கிறது" (ரோமர் 1:16). "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப்பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது" (எபிரேயர் 4:12). மெய்யான விசுவாசியால் மட்டுமே சங்கீதம் 34:8 கூறும், "கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள்; அவர் மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" என்ற சத்தியத்தைப் புரிந்து கொள்ள முடியும். எபிரேயர் 11:6, "தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" என்று கூறுகின்றது. வேதமே நமக்கு வல்லமையளிப்பதாகவும், துணை புரிவதாகவும் உள்ளது. அதன் மூலமே நாம் இயேசுவுக்குள்ளாக கர்த்தரை அணுக முடிகின்றது. எத்தனை அருமையான சத்தியம்! வேதம் ஜீவனுள்ளதாயும், நமது ஜீவனளிக்கிறதாயும் உள்ளது.

**இ. அதன் சிறப்பான தன்னியல்பு -**

வேதம், படித்தவர்களும், படிக்காதவர்களும் வாசித்துப் புரிந்து கொள்ளும்படி எல்லோருக்குமாக எழுதப்பட்டிருக்கிறது (பாரா 7). அதன் சில பகுதிகள் சிறப்பான இயல்பைக் கொண்டுள்ளன. உதாரணமாக, ஆதியாகமம் முதல் அதிகாரத்தின் படைப்பைப்பற்றிய விளக்கத்தைக் கூறலாம். யோவான் 1 இல் கொடுக்கப்பட்டுள்ள கிறிஸ்துவைப் பற்றிய போதனை; உபாகமம் 1-11 வரையுள்ள அதிகாரங்களில் காணப்படும் மோசேயின் பிரசங்கம்; சங்கீதத்தின் 1, 8, 19, 23, 32, 51, 90, 103 ஆகிய அழகான பகுதிகள்; யோபுவின் துன்பங்கள்; ஏசாயாவினதும், இயேசுவினதும் பெரும் பிரசங்கங்கள், ரோமர், காலத்தியர், எபேசியர் ஆகிய நூல்களில் காணப்படும் பவுலின் இறையியல் போதனைகள் ஆகியவற்றையும் எடுத்துக்காட்டாக கூறலாம். கர்த்தரின் வேதம் சிறப்பானது, அதன் மலை உயரப்போதனைகள் நம்மை பிரமிக்கவைப்பவை.

**ஈ. அதன் எல்லாப்பகுதிகளும் ஒன்றோடொன்று ஒத்துப் போகும் தன்மை -**

வேதத்தின் தெய்வீகத்தன்மை பற்றிய அநேக சான்றுகளில் இது மிக முக்கியமானது. படைப்பில் ஆரம்பித்து, அப்போஸ்தலர்களின் ஊழியத்தால் ஏற்படுத்தப்பட்ட திருச்சபை வரலாறு வரையுமுள்ள, மீட்பின் வரலாற்றை விபரிக்கும் நூலாக வேதம் காணப்படுகின்றது. வேதத்தை எழுதியவர்களையும், அவர்களது தனித்தன்மையையும், வேதத்தின் வகைவகையான இலக்கிய அம்சங்களையும், அதன் கால அளவு ஆகிய அனைத்தையும் பார்க்கும்போது, அது தெய்வீக வழிநடத்தலாலேயே ஒருங்கிணைக்கப்பட்டு, அதன் அனைத்து நூல்களும், எழுதியவர்களும் ஒத்துப்போகும் ஒற்றுமையைத் தனக்குள் கொண்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளாமல் இருக்க முடியாது.

**உ. எல்லா வகையிலும், எல்லா மகிமையையும் தேவனுக்கே கொடுக்கும் அதன் மாட்சி -**

வேதத்தைப் படிக்கும்போது அதை நாம் பகுதி பகுதியாக படிப்பது வழக்கம். சில வேளைகளில் தள்ளி நின்று அது முழுவதையும் நாம் மொத்தமாகவும் பார்க்கிறோம். இவ்வாறு பார்க்கும்போது கர்த்தர் தனது மகிமைக்காகவே வேதத்தை நமக்குத் தந்திருக்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ளாமலிருக்க முடியாது. நாம் ஓர் வரையறைக்குள் கட்டுப்படுத்தப்பட்டவர்களாகவும், தேவன் எல்லையற்றவராகவும் இருப்பதால் அவரையே எல்லா மகிமையும் சேர வேண்டும். அவர் நீதியுள்ளவராக இருக்கிறார். நாம் நீதிமான்களாக வேண்டியவர்களாக இருக்கிறோம். அவர் ஞானியாகவும், வல்லவராகவும் இருக்கிறார். நாம் புத்தியற்றவர்களாகவும், வல்லமையற்றவர்களாகவும் உள்ளோம். அவர் கிருபையுள்ளவராகவும், கருணையுள்ளவராகவும் இருக்கிறார். நாமோ கேடானவர்களாகவும், இரட்சிக்கப்பட வேண்டியவர்களாகவும் இருக்கிறோம்.

**ஊ. இரட்சிப்புக்குரிய ஒரே வழிமுறையைக் குறித்த அதன் முழுமையான வெளிப்படுத்தல் -**

வேதம் இரட்சிப்புக்குரிய வழியை மெய்யாகவே மனிதனுக்கு வெளிப்படுத்துகிறது. அது நமது கால்களுக்கு தீபமாகவும், நம் பாதைக்கு வெளிச்சமாகவும் இருக்கிறது. அது நமக்குப் பாதையைக் காட்டித் தருவதோடு மட்டும் நின்றுவிடாமல் அப்பாதையில் நம்மை வழிநடத்துகிறது. பல்லாயிரக்கணக்கானவர்களை வழிநடத்தி, அவர்களுக்கு இரட்சிப்பை அளித்து தேவ கோபத்திலிருந்து விடுவித்திருக்கும் வேதத்தை நம்பினால் அது நம்மையும் வழிநடத்தும்.

**எ. அதன் இன்னும் அநேக உயர்ந்த தன்மைகளும், முழுமையான பூரணத்துவமும் -**

விசுவாச அறிக்கையின் ஆசிரியர்கள், வேதம், எல்லையற்ற நல்ல போதனைகளைக்கொண்ட ஒரு சுரங்கம் என்றும், அது விசுவாசியை அவனது விசுவாசத்தில் ஊக்கப்படுத்துவதற்கான அநேக விதவிதமான சான்றுகளையும் தனக்குள் கொண்டுள்ளதென்றும் நம்பினார்கள். இதையே அவர்கள் அதன் "உயர்ந்த தன்மைகளும், பூரணத்துவமும்" என்ற பதத்தின் மூலம் விளக்க முனைகிறார்கள். தேவன் தமது வார்த்தையின் மூலம் நமக்கு அருமையான சத்தியங்களைப் போதிப்பார் என்ற எதிர்பார்ப்புடன் நாம் வேதத்தை வாசித்து, படித்து, மனப்பாடம் செய்வதுடன், வேதப்பிரசங்களைக் கேட்கவும் வேண்டும் (சங்கீதம் 119:18).

இறுதியாக, வேதத்தின் அதிகாரத்தைக்குறித்த இப்பகுதியில் நாம் பரிசுத்த ஆவியைக் குறித்த ஓர் உண்மையைப் பார்க்க வேண்டும். இதுவரை நாம் பார்த்த வேதத்தின் அதிகாரத்தைக் குறித்த சான்றுகள் விசுவாசியை நம்பவைக்கும் அளவுக்கு எத்தனை வலிமையுள்ளதாக இருந்தபோதும், விசுவாச அறிக்கை கூறுவதுபோல், பரிசுத்த ஆவியானவர் திருமறை மூலம் நமது இருதயத்தில் தரும் சான்றினாலும், நம்மை நடப்பிக்கின்ற செயலின் மூலமும் மட்டுமே அவற்றை அனுபவிக்க முடியும்.

5 ஆம் பாராவில் தரப்பட்டுள்ள ஆவியானவரின் செயலைப்பற்றிய விளக்கத்தை நாம் மீண்டும் ஒரு முறை பார்ப்போம். "பரிசுத்த ஆவியானவர் திருமறையின் மூலம் நமது இருதயத்தில் தரும் சான்றினாலும், நம்மில் நடப்பிக்கின்ற செயலினாலும்" என்று கூறப்பட்டிருக் கிறது. ஆவியானவரின் இச்சாட்சி உள்ளார்ந்ததும், தனிப்பட்டதுமானதாகும். இது ஒரு விசுவாசியின் இருதயத்தில் நிகழும் செயலாகும். இது ஆவியானவரின் செயலாகும். ஆனால், இதனை நாம் நமது சுய அனுபவ மாகவோ அல்லது நமது சிந்தனையின் வெளிப்பாடா கவோ கருதிவிடக்கூடாது. இது வேதத்தில் இருந்து வருவதாகவும், அதனால் வெளிப்படுத்தப்படுவதாகவும் உள்ளது. வேதத்தை நாம் வாசித்து, படித்து, மனப்பாடம் செய்யும்போதே ஆவியானவர் வேதத்தின் மூலமாக நமது இருதயத்தில் சான்று பகர்கிறார். விசுவாச அறிக்கை பின்வரும் வசனங்களை இதற்கு எடுத்துக்காட்டாக சுட்டிக் காட்டுகின்றது. யோவான் 16:13, 14; 1 கொரி. 2:10-12; 1 யோவான் 2:20, 27.

யோவான் 16:13, 14 இல் பரிசுத்த ஆவியான வர் சத்தியத்தின் ஆவி என்று அழைக்கப்படு கிறார். இங்கே, சத்தியம் என்று அழைக் கப்படுவது வேத சத்தியமேயாகும். சத்தியத்தின் ஆவியாக பரிசுத்த ஆவி நமக்கு எல்லா சத்தியங்களை யும் போதிக்கிறார். ஆவியானவர் நமக்கு வெளிப்படுத்தும் சத்தியம் எழுத்தில் தரப்பட்டுள்ள வேதத்தின் சத்தியம் மட்டுமே என்பதை நாம் ஒருவித சந்தேகமுமில் லாமல் புரிந்து கொள்ள வேண்டும். இது நாம் தனிப்பட்டவிதத்தில் ஒரு அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதற்கான ஆவியின் வழிநடத்தலல்ல. இன்று அநேகர் இங்கேயே தவறிழைக்கிறார்கள். அவர்கள் ஆவியானவர் வேத சத்தியத்தைத் தவிர வேறு வழிகளில் நம்மை வழி நடத்துவதில்லை என்பதைப் புரிந்து கொள்வதில்லை. தனிப்பட்டவிதத்தில் ஒரு அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் மட்டுமே அவர்கள் அக்கறை செலுத்துகிறார்கள். ஆனால், ஆவியானவர் வேத சத்தியத்தில் மட்டுமே நம்மை வழி நடத்துகிறார். அவ்வழி நடத்துதலை நாம் வேதத்தை ஊன்றிப் படிப்பதன் மூலம் மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும். வேதத்தை ஒரு மூலையில் வைத்து விட்டு ஆவியானவரின் வழி நடத்துதலை நாடி நின்றால், அசுத்த ஆவி மட்டுமே நம்மை வழி நடத்தும்.

**இன்று அநேகர் இங்கேயே தவறிழைக்கிறார்கள். அவர்கள், ஆவியானவர் வேத சத்தியத்தைத் தவிர வேறு வழிகளில் நம்மை வழி நடத்துவதில்லை என்பதைப் புரிந்து கொள்வதில்லை. தனிப்பட்டவிதத்தில் ஒரு அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் மட்டுமே அவர்கள் அக்கறை செலுத்துகிறார்கள். ஆனால், ஆவியானவர் வேத சத்தியத்தில் மட்டுமே நம்மை வழிநடத்துகிறார். அவ்வழி நடத்துதலை நாம் வேதத்தை ஊன்றிப்படிப்பதன் மூலம் மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும். வேதத்தை ஒரு மூலையில் வைத்து விட்டு ஆவியானவரின் வழி நடத்துதலை நாடி நின்றால், அசுத்த ஆவி மட்டுமே நம்மை வழி நடத்தும்.**

1 கொரி. 2:12-13, நாம் ஆவியானவரைத் தேவனிடம் இருந்தும், தேவன் நமக்குக் கொடுத்துள்ளவற்றை ஆவியானவர் மூலமாக பெற்றுக் கொள்வதற்காகவும் அவரை அடைந்திருக்கிறோம் என்று போதிக்கின்றது. அவ்வாறு தேவன் நமக்குக் கொடுத்துள்ளவைகள் யாவை? 13 ஆம் வசனம், அவை ஆவியானவர் நமக்குப் போதிக்கும் வேத சத்தியங்கள் என்று கூறுகின்றது. 1 கொரி. 2 ஆம் அதிகாரம் சிறப்பான வெளிப்படுத்தல் அற்புதமாக எப்படிச் செயல்படுகின்றது என்பதை விளக்குகின்றது. இப்பகுதியின் 10 ஆம் வசனம், ஆவியானவர் தேவனுடைய ஆழங்களை ஆராய்ந்திருக்கி றார் என்று கூறுகின்றது. 11 ஆம் வசனம் தேவனுக் குரியவைகளை தேவனின் ஆவியாலன்றி ஒருவனும் அறிய முடியாது என்று போதிக்கின்றது. 12 ஆம் வசனம், தேவனின் ஆழங்களையும், அவரது சித்தத்தையும் ஆராய்ந்துள்ள ஆவியானவர், ஒவ்வொரு விசுவாசியிலும் இருந்து தான் அறிந்துள்ளவற்றை அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார் என்று கூறுகின்றது!

1 யோவான் 2:20 லும் 27 லும், ஆவியானவரால் விசுவாசிகள் அபிஷேகிக்கப்படுவதாக கூறப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டிலே இது ஒரு அடையாள மாகக் காணப்படுகின் றது. தீர்க்கதரிசிகளும், அரசர்களும், ஆசாரியர் களும் கர்த்தரால் அழைக்கப்பட்டு, அபிஷேகிக்கபட்டு அவரது ஊழியத்திற் காக தயார் செய்யப்பட் டார்கள். இங்கே ஒரு பெரும் ஒற்றுமையைப் பார்க்கிறோம். ஒவ்வொரு விசுவாசி யும் கிறிஸ்துவை விசுவாசித்த அன்றே வேதத்தை விளங்கிக் கொள்ளுவதற்காக ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டிருக் கிறான். இதைப் பெற்றுக்கொள்ளாத கிறிஸ்தவன் இருக்க முடியாது. யோவான் தனது நிருபங்களிலே அக்காலத்தில் நிலவிய தவறான போதனையான, ஒரு சிலரால் மட்டுமே இரகசியமாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஞானத்தைப் பற்றி எதிர்த்து எழுதுகிறார். இப்போலிப்போதனைகளுக்கு எதிராக எழுதும் யோவான், கிறிஸ்தவன் ஆவியானவரின் துணையால் மட்டுமே வேத வார்த்தைகளை அறிந்து கொள்ள முடியும் என்று தெரிவிக்கிறார். அதேவேளை, தேவன் திருச்சபையில் போதிப்பதற்காக போதகர்களை ஏற்படுத்தியிருப்பதையும் யோவான் நிராகரிக்கவில்லை. அக்காலத்தில் நிலவிய போலிப்போதனையான, ஒரு சிலரால் மட்டுமே வேத இரகசியங்களைப் புரிந்து கொள்ளவும், ரோபதிக்கவும் முடியும் என்பதையே யோவான் எதிர்க்கிறார். இன்று ரோமன் கத்தோலிக்க மதம் இதையே போதிக்கிறது. கெரிஸ்மெட்டிக் குழுக்களும் இதையே நம்புகின்றனர். ஆகவே, யோவான் 1 யோவான் 1:4 இல், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி இவைகளை உங்க

ளுக்கு எழுதுகிறேன் என்று கூறுகிறார. இதன் மூலம் எல்லாக் கிறிஸ்தவர்களும் தான் எழுதுவதைப் புரிந்துகொண்டு ஆவியில் ஆனந்தமடைய வேண்டு மென்பதே யோவானின் எதிர்பார்ப்பு.

இதுவரை பார்த்தவற்றை சுருக்கமாகக் கூறினால், நாம் வேதம் போதிப்பதையே நம்பி, அதைப்பின்பற்றி நடக்க வேண்டும். ஏனெனில், 1. தேவன் எல்லா அதிகாரத்தை யும் தனக்குள் கொண்டு பேசும்போது அதை நாம் கேட்டு நடக்க வேண்டும். 2. வேதம், தான் கடவுளின் வார்த்தை என்பதற்கான அநேக சான்றுகளைத்தந்து தன்னைத்தானே நிரூபிக்கிறது. 3. நாம் ஜெபத்தோடு வேதத்தைப் படித்து தேவனோடு ஐக்கியத்தில் வரும் போது நமக்குள்ளேயுள்ள ஜீவனுள்ள சாட்சி அதன் அதிகாரத்தில் நமக்கு நம்பிக்கை தருகிறது.

விசுவாச அறிக்கையின் 4 ஆம், 5 ஆம் பாராக்கள் பின்வரும் வேத வசனங்களை நமக்குச் சுட்டிக் காட்டுகின்றன. இப்போதனைகளைத் தரும் பிரதான வேத வசனங்களாக 2 பேதுரு 1:19-21; 2 தீமோ. 3:16; யோவான் 16:13, 14; 1 கொரி. 2:10-12 ஆகியன உள்ளன. இவற்றிற்குத்துணை புரியும் பகுதிகளாக 2 தெசலோ. 2:13; 1 யோவான் 5:9; 1 யோவான் 2:20, 27 ஆகியன உள்ளன. இவற்றோடு வேதத்தின் அதிகா ரத்தை பரிசுத்த ஆவியோடு இணைத்துப் போதிக்கும் வலிமையுள்ள வேதப்பகுதிகளாக யோவான் 14-16 ம் 1 கொரி. 2 ம் உள்ளன. இப்பகுதிகளை நாம் மிகக் கவனத்துடன் படித்துப் புரிந்து கொள்வது அவசியம்.

**பாடம்:** வேதம் உங்களுடைய வாழ்க்கையில் நாம் மேலே பார்த்தவிதத்தில் அதிகாரம் செலுத்துகிறதா? அதுவே உங்களுடைய அதிகாரம் என்று உங்களால் கூற முடியுமா? அதனுடைய வழிகளை மட்டும் பின்பற்றி உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எல்லாத் தீர்மானத்தையும் எடுக்கிறீர்களா? சபைப்போதகர்களும், பெற்றோர்களும், நண்பர்களும் வேதத்தின் அடிப்படையில் உங்களைத் திருத்தவும், வழிநடத்தவும் முயலும்போது அதற்கு எதிராக நீங்கள் நடந்து கொள்கிறீர்களா? இவையே நாம் வேதத்தை உண்மையில் பின்பற்றுகிறோமா என்பதைத் தீமானிக்கின்றன. தாவீது, சங்கீதம் 141:5 இல், "நீதிமான் என்னைத் தயவாய்க்குட்டி, என்னைக் கடிந்து கொள்ளட் டும். அது என் தலைக்கு எண்ணையைப் போலிருக்கும். என் தலை அதை அல்லத்தட்டுவதில்லை" என்று கூறுகிறான். வேதத்தின் அதிகாரத்தை நாம் நம்பினால் அது சொல்கிறபடி நடக்க வேண்டும்.

சில கிறிஸ்தவர்கள் வேத வாசிப்பும், தியானமும் தங்க ளுக்கு சோர்வை ஏற்படுத்துவதாகக் கூறுவார்கள். தினமும் வேத வாசிப்பில் அவர்களால் ஆனந்தமடைய முடிவதில்லை. இதற்குக் காரணம் வேதமல்ல. வேதத்தில் எந்தவிதமான சோர்வைத்தரும் போதனைகளோ, வரலா ற்று நிகழ்ச்சிகளோ இல்லை. இக்கிறிஸ்தவர்களுக்கு பரிசுத்த ஆவியோடு முறையான தொடர் பில்லாததா லேயே இவ்வாறு சோர்வடைகிறார்கள். யோவான் 14-16 வரையும் உள்ள வேதப்பகுதிகளை மறுபடியும் வாசித்துப் பார்த்து, நமக்கும் ஆவியான வருக்கும் இருக்கும் உறவைப்பற்றி கிறிஸ்து இயேசு விளக்குவதைப் புரிந்து கொள்ளுங்கள். எபேசியர் 5:18 சொலகிறபடி வேதத்தை படிக்கும்போது நாம் ஆவியில் நிறைந்திருக்கவேண்டும். ஆவியில் நிறைந்திருப்பது என்றால், வாழ்க்கையில் பாவத்தின் வழியில் போகாமல், ஆவியின் வழியில் நடப்பதாகும். வேதம் கூறுகிறபடி நடந்து கர்த்தரை மகிழ் விக்கிறவன் ஆவியில் தொடர்ந்து நிறைந்திருப்பான். ஆவியில் வழியில் நடந்து, இவ்வாறாக ஆவியில் நிறைந்திருப்பவர்களுக்கு வேதத்தைப் படிப்பதில் சோர் வேற்படாது. மாறாக, அவர்கள் அதில் மூழ்கித் திளைப் பார்கள். நண்பர்களே! கலாத்தியர் 5:25, கூறுவதுபோல் நீங்கள் ஆவியின் வழியில் நடக்கிறீர்களா? ஆவியின் கனிகளை உங்கள் வாழ்க்கையில் காணமுடிகின்றதா? (கலா. 5:22). நீங்கள் ஆவியில் நிறைந்திருக்கிறீர்களா? ஆவியின் துணையோடு மட்டுமே நீங்கள் வேதப்படிப்பில் ஆனந்தமடைய முடியும்.

## ஐரோப்பா, வட அமெரிக்கா, கனடா, மலேஷியா சிங்கப்பூர் மற்றும் மத்தியகிழக்கு நாடுகளில் வாழும் வாசகர்களுக்கு ஒரு வேண்டுகோள்

**1999** ஆம் ஆண்டு முதல் பத்திரிகைக்கு சந்தா அறிமுகப்படுத்தப்படுகிறது. தொடர்ந்தும் பத்திரிகையைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறவர்கள் கீழே தரப்படும் சந்தா விபரப்படி இவ் வருடத்திற்கான [**1999**] சந்தாவைத் தயவுடன் அனுப்பி வைக்கவும்.

ஒரு வருட சந்தா **NZ $16.00** [தபால் செலவு உள்ளடங்கியது]
[வங்கிக் காசோலைகளை நியூசிலாந்து டாலரில் அனுப்பவும்]

அனுப்ப வேண்டிய முகவரி: Bible Lamp, P O Box 62 159, Sylvia Park Auckland, New Zealand.



# வில்லியம் கேரி

வில்லியம் கேரி

கர்த்தரிட மிருந்து பெருங் காரியங் களை எதிர் பாருங்கள்; கர்த்தருக் காகப் பெருஞ் சாதனை களைச் செய்யுங் கள்

**பேராசிரியர் வில்லியம் கேரி**

கிழக்கிந்திய கம்பேனி அக்காலத்தில் தனது ஊழியர்கள் இந்திய மக்கள் மத்தியில் திறம்பட சேவை புரிவதற்கு இந்திய மொழி, கலாச்சாரம், வரலாறு என்பவற்றில் அறிவும், திறமையும் இருக்க வேண்டும் என்பதற்காக, அவர்களைத் தயார் செய்ய போர்ட் வில்லியம் கல்லூரி என்ற பெயரில் ஒரு கல்லூரியை ஏற்படுத்தியிருந்தது. இரண்டு மூன்று வருடங்களுக்கு அரச ஊழியர்களுக்கு அக்கல்லூரியில் பயிற்சி அளிக்கப்பட்டது. ஆனால், கல்லூரிக்கு வங்காள மொழியில் பயிற்சி அளிக்க ஒருவர் தேவைப்பட்டது. எதிர்பாராதவிதமாக அப்பணிக்கான நியமனம் கேரிக்கு கிடைத்தது. கேரி ஏற்கனவே வங்காள மொழியில் புதிய ஏற்பாட்டை வெளியிட்டிருந்தார். அத்தோடு முழு வேதத்தையும் அம்மொழியில் மொழிபெயர்க்கும் முயற்சியிலும் ஈடுபட்டிருந்தார். அவருக்கு வங்காள மொழியில் சரளமாகப் பேசவும், எழுதவும் முடிந்தது. இத்தகுதிகள் அவரை எவ்வித சந்தேகமுமின்றி இப்பணிக்கு தகுதியானவராக்கியது.

ஆங்கிலேய அதிகாரிகளுக்கு மிஷனரிகள் மேலும் அவர்களுடைய ஊழியத்தின் மீதும் எந்தவித அக்கறையும் இல்லாதிருந்ததோடு, அதை எதிர்க்கவும் செய்தனர். அவர்களுடைய கல்லூரியிலேயே கேரி பணிபுரிய நேரிட்டது தேவசித்தமே. கேரி தனக்குக்கீழ் திறமையான வங்காள பண்டிதர்களை உதவிக்காக நியமித்திருந்தார். ராம் ராம் பாசுவையும் துணைக்கு நியமித்திருந்தார்.

அக்காலத்தில் வங்காள மொழியில் நல்ல இலக்கணப்புத்தகங்கள் இருக்கவில்லை. இருந்த ஒரே புத்தகமும் அச்சில் இல்லை. முதல் வருடத்திலேயே கேரியின் பண்டிதர்கள் வங்காள மொழியில் அருமையான ஒரு இலக்கண நூலை சமஸ்கிருத மொழியில் இருந்து மொழிபெயர்த்து வெளியிட்டனர். ராம் ராம் பாசு, ராஜா பிரதபாத்தியாவின் வரலாற்றை வங்காள மொழியில் வெளியிட்டார். இவையே நவீன வங்காள இலக்கிய வளர்ச்சியின் ஆரம்பப்படிகளாக அமைந்தன.

கல்லூரியில் முதல் தவணை முடிவடைவதற்கு முன்பே கேரி வங்காளத்தோடு சமஷ்கிருதமும் போதிக்கப் பணிக்கப்பட்டார். அவருடைய மாணவர்களும் வங்காள மொழியில் நல்ல முன்னேற்றத்தை அடைந்தனர். பொதுக்கூட்டங்களிலும் கேரி சமஸ்கிருத்தில் பேச அழைக்கப்பட்டார். அக்காலத்தில் ஐரோப்பியர்களில் பிராமணர்களுக்கு சமமாக சமஸ்கிருதத்தில் பேசக்கூடிய இருவரில் கேரியும் ஒருவராக இருந்தார். கூடிய விரைவிலேயே கேரி மராத்தி மொழியிலும் கல்லூரியில் போதிக்கும்படி நேரிட்டது.

வகுப்பில் கேரி வங்காளத்தை நடைமுறைக்கேற்றபடி போதிக்கத் தவறவில்லை. மொழிப்பயிற்சி சுவாரசியமுள்ளதாக இருப்பதற்காகவும், அன்றாடப் பேச்சு வழக்கிற்கு ஏற்றதாக இருப்பதற்காகவும் வங்காள நாளிதழ்களையும் கேரி வகுப்பில் பயன்படுத்திக் கொண்டார். வகுப்பில் தான் வங்காள மொழியில் மொழிபெயர்த்திருந்த பழைய ஏற்பாட்டின் சங்கீதம், ஏசாயா ஆகிய நூல்களைப் பயன்படுத்த கேரி அனுமதி பெற்றிருந்தார்.

கல்லூரியின் ஆரம்ப காலத்தில் இருந்து போதித்தவர்களில் கேரி மட்டுமே

இருந்தார். தனது வாழ்க்கையின் முப்பது வருடங்களை கேரி இப்பணியில் செலவிட்டிருந் தார். கல்லூரிப் பேராசிரியர்களில் பென்சன் பெற்றவர் கேரி ஒருவரே. இம்முப்பது வருடங் களில் அரசாங்கத்தால், வங்காள, மராத்தி, சமஸ்கிருத மொழிகளில் வெளியிடப்பட்ட எந்த ஒரு அறிக்கையும் கேரியால் திருத்தப்படாமல் வெளியிடப்பட்டதில்லை.

கேரியின் பண்டிதர்கள் பதினாறு நூல்களை வெளியிட்டனர். இவைகள் அநேகமாக சமஸ்கிருத அல்லது பார்சீய மொழியில் இருந்து மொழி பெயர்க்கப்பட்டவையாக இருந்தன. இவையே வங்காள மொழி இலக்கியத்தின் ஆரம்ப ஆக்கங் களாகவும் இருந்தன.

கேரி, வங்காளம், மராத்தி, பஞ்சாபி, தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் இலக்கண நூல் களைத் தயாரித்து வெளியிட்டார். அவரது சமஸ்கிருத இலக்கண நூல் ஆயிரம் பக்கங்களைக் கொண்டதாக இருந்தது. அதுமட்டுமல்லாமல் வங்காள, மராத்திய, சமஸ்கிருத மொழிகளில் சொல்லகராதிகளையும் தயாரித்து வெளியிட்டார். இவற்றோடு, பூத்திய மொழியிலும் இலக்கண நூலையும், சொல்லகராதியையும் வெளியிட்டார். வங்காள சொல்லகராதியைத் தயாரிக்க முப்பது வருடங்களைக் கேரி செலவிட்டிருந்தார். அது எட்டாயிரம் சொற்களை உள்ளடக்கி மூன்று நூல்களாக வெளிவந்தது.

கேரி கல்லூரியில் தனது மாணவர்களுக்கு கிறிஸ்துவை அறிமுகப்படுத்துவதில் எப்போதும் தவறவில்லை. கல்லூரியில் முதல் தவணை முடிவடைவதற்குள் மாணவர்கள் கேரியின் அறையில் குழுவாக அவரைச்சுற்றி அமர்ந்து ஆன்மீக காரியங்களைப் பற்றி விவாதிப்பது வழக்கமானதாக இருந்தது. அவர்களில் சிலர் பின்பு கேரியின் மூலம் கர்த்தரை அறிந்து கொண்டனர்.

தனிப்பெரும் மனிதனாக இந்திய மொழிகளுக்கும், அவற்றின் இலக்கண, இலக்கியங்களின் வளர்ச்சிக்கும் கேரி அளித்துள்ள பங்கை இந்திய சமுதாயம் எப்போதுமே மறக்க முடியாது. சுவிஷேசத்தை எடுத்துச் சொல்ல அழைக்கப் பட்டவர்களுக்கு, எந்தளவுக்குத் தாம் பணி புரியும் மக்களின் மொழியிலும், கலாச்சாரத்திலும் பரிச்சயமும், பாண்டித்தியமும் இருக்க வேண்டு மென்பதற்கு கேரி வலிமைமிக்க உதாரணமாகத் திகழ்கிறார். தமிழ் அறிந்து, தமிழ் பேசித், தமிழர்கள் மத்தியில் ஊழியம் செய்பவர்களே தம் மொழியில் பேசுவதற்கும், எழுதுவதற்கும் தயக்கம் காட்டும் இக்காலத்தில் ஆங்கிலேயரான கேரி அந்நிய மொழிகளில் அருமையாகப் பேசிப் புரிந்துள்ள பணிகள் நமக்கு முன்னுதாரணமாக இருக்கின்றன. சுவிஷேச ஊழியத்திற்கு மொழிப் புலமை எத்தனை அவசியம் என்பதை கேரி நமக்கு தொடர்ந்து நினைவுபடுத்துகிறார். கேரியின் வழியைப்பின்பற்றி தனது மொழியில் நல்லறிவு பெற்றுப் பிரசங்கிப்பது ஒவ்வொரு பிரசங்கியினதும் கடமை.


# சவரின் கிறேஸ் வெளியீடுகள்

| | |
|---|---|
| திருச்சபை சீர்திருத்தம் | $7.00 |
| சுவிஷேசக் கோட்பாடும் புதிய சுவிஷேசக் கோட்பாடும் | $4.00 |
| தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு | $4.00 |
| வேதாகமத்தை விளங்கிக் கொள்வதெப்படி? | $3.50 |
| வியாக்கியானப் பிரசங்கம் | $3.50 |
| கிறிஸ்தவ இறையியல் | $4.00 |
| போல் யொங்கி சோவின் நான்காவது பரிமாணம் | $5.00 |

வங்கிக் காசோலைகளை நியூசிலாந்து டாலரில் “Bible Lamp” என்ற பெயரில் அனுப்பவும். அனுப்ப வேண்டிய முகவரி :

Bible Lamp, P O Box 62 159, Sylvia Park, Auckland, New Zeland.

2

# 1 கொரி. 12–14

## (ஆவிக்குரிய வரங்களைப் பற்றிய விளக்கம்)

இதுவரை நாம் வேதத்தைப்புரிந்து கொள்வதற்கு அவசியமான விதிகளை ஆராய்ந்து, அவ்விதிகளின் அடிப்படையில் 1 கொரி. 12-14 வரையிலான அதிகாரங்களை ஆராய முற்பட்டு, இவ்வதிகாரங்கள் எத்தகைய சந்தர்ப்ப அமைவைக் கொண்டமைந்துள்ளன என்று பார்க்க ஆரம்பித்தோம். அவ்வாறு நாம் பார்த்தபோது, இம்மூன்று அதிகாரங்களும் உண்மையில் 11 ஆம் அதிகாரத்திலேயே ஆரம்பிக்கின்றன என்று பார்த்தோம். அதற்கான விளக்கங்களை கடந்த இதழில் வாசிக்கலாம். பதினாறாம் அதிகாரம் திருச்சபை தவிர்ந்த ஏனைய பொது இடங்களிலும், திருச்சபை கூடி வரும்போதும் ஆண்களும், பெண்களும் நடந்து கொள்ள வேண்டிய முறைபற்றி மிக முக்கியமான போதனையை அளிப்பதையும் நாம் பார்த்தோம். இன்று இவ்வாறு வேதத்தை சந்தர்ப்ப அமைவுக் கேற்ப விவரித்துப்படிக்கும்முறை அடியோடு இல்லாமலிருப்பதை மறுக்க முடியாது. சந்தர்ப்ப அமைவுக்கேற்ப வேதத்தைப் படிக்கும் போது நமது சொந்த எண்ணங்களையும் அபிப்பிராயங் களையும் வேதத்தில் திணிப்பதை நாம் தவிர்த்துக் கொள்ளலாம்.

ஆகவே, 11:1-16 வரையிலான வேதப்பகுதி இனி நாம் தொடர்ந்து படிக்கப்போகும் அதிகாரங் களுக்கு மிக அவசியமான அடித்தளத்தை அமைத்திருப்பதை நம்மால் பார்க்க முடிகிறது. இனிவரப்போகும் போதனைகள் சபை கூடி வரும்போது ஆண்களும், பெண்களும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றிப் போதிக்கின்றன. இச் “சபை கூடிவரும் போது” என்ற வார்த்தைப் பிரயோகத்தை நாம் திரும்பத் திரும்பப் பார்த்தாலும் அதில் எந்தவிதமான பாதகமுமில்லை. உண்மையில் கூறப்போனால் இப்படி இதை மீண்டும், மீண்டும் பார்க்க வேண்டியது இக்காலத்தில் மிக மிக அவசியமான தொன்றாக இருக்கின்றது. இங்கே சபை கூடிவரும் போது என்று பவுல் நினைவூட்டுவது அதிகார பூர்வமாக, கர்த்தரின் பெயரில் உள்ளூர் சபை மூப்பர்களின் தலைமையில் கூடிவருதலைக் குறிக்கும் என்று கடந்த இதழில் விளக்கியிருந் தோம். அது ஆராதனைக்கோ, அல்லது வேத போதனைகளைப் பெற்றுக்கொள்ளவோ, சபைக் காரியங்களைப்பற்றிப் பேசவோ கூடிவரும் சபைக்கூட்டங்களைக் குறிப்பதாகும். வேதபூர்வ மாக அமைந்த உள்ளூர் திருச்சபைகளில் அங்கத்துவம் பெற்று மூப்பர்களுக்கீழ் இருந்து சபையின் அனைத்துக்காரியங்களிலும் பங்கேற்று கர்த்தரை மகிமைப்படுததிக் கொண்டிருப்பவர் களுக்கே சபைகூடிவருதலைப்பற்றித் தெரிய நியாயமுண்டு. இன்று நிறுவனங்களாலும், கெரிஸ்மெட்டிக் குழுக்களாலும் பாதிக்கப்பட்டு சபைபற்றிய உணர்வே இல்லாது வாழ்ந்து கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர் களுக்கு இது புரிவது சிறிது கஷ்டமே. ஏனெனில், ஒவ்வொருவரும் தமக்குத்தாமே ராஜா என்ற விதத்தில் ஆவிக்குரிய அனைத்துக் காரியங்களை யும் செய்து கொண்டிருக்கும்போது அதிகார பூர்வமான சபைகூடிவருதலைப்பற்றிப் புரிந்து கொள்வது கஷ்டம். ஆனால், இதைப் புரிந்து கொள்ளாவிட்டால் தொடர்ந்து நாம் படிக்கப் போகும் அதிகாரங்களைப்பற்றிய முழு விபரத்தை யும், அவற்றை நாம் பயன்படுத்த வேண்டிய முறை களைப்பற்றியும் சரிவரப் புரிந்து கொள்ள முடி யாது.

இனி நாம் பார்க்கப்போகும் போதனைகள் அதிகாரபூர்வமாக சபை கூடிவரும்போது நிகழ்ந்த காரியங்களைப்பற்றியும், அங்கு ஏற்பட்ட தவறு களைப் பற்றியும், அத்தவறுகளை எவ்வாறு திருத்திக் கொண்டு வேதபூர்வமாக சபைகூடிவர வேண்டும் என்றும் பவுல் போதிக்கிறார். இதுவே இப்போதனைகளுக்கான பொதுவான, சுருக்கமான விளக்கம். இதை வாசகர்கள் நினைவில் வைத்து இப்பகுதிகளைப் படிக்க வேண்டியது மிகவும் அவசியம். இதுவரை **11:1-16** வசனங்களை நாம் பார்த்திருக்கிறோம். அடுத்த பகுதியை நாம் இப்போது கவனிப்போம். அடுத்த வேதபகுதி ***11:17-34*** வரையுள்ள வசனங்களை உள்ளடக்கியது.

## சபைகூடி வந்து எடுக்க வேண்டிய திருவிருந்து

*11:17-34* வரையிலான வசனங்கள் கொரிந்தியர்கள் உள்ளூர்சபையாகக் கூடிவந்து திருவிருந்து எடுக்கும்போது எவ்வாறாக தவறாக நடந்து கொண்டார்கள் என்று விளக்கி அத்தவறுகளைத் திருத்தி வேதபூர்வமாக திருவிருந்தில் பங்கு கொள்வதெப்படி என்று விளக்குகிறது. ஆவிக்குரிய வரங்களைத்தானே நாம் படிக்க முனைந்தோம். இதில் திருவிருந்து பற்றிய போதனையை ஏன் கொண்டு வரவேண்டும்? என்று நீங்கள் கேட்க லாம். உங்கள் கேள்வி நியாமமானதுதான். ஆனால், இப்பகுதி நிச்சயமாக திருவிருந்தைப் பற்றிப்போதித்தபோதும் "சபை கூடிவருதலைப்" பற்றிய மிக அவசியமான அம்சங்களைக் கொண்டுள்ளதை நாம் கவனிக்க வேண்டும்.

கொரிந்தியருக்கு எழுதப்பட்ட நிருபம் கொரிந் திலுளுள்ள உள்ளூர் சபைக்கு எழுதப்பட்ட நிருபம். முதலாம் அதிகாரத்தில் இரண்டாம் வசனத்தில் இதையே பவுல் சுட்டிக்காட்டுகிறார். "கொரிந்துவிலே . . . தேவனுடைய சபைக்கும் என்று எழுதப்பட்டிருக்கிறது." இங்கே (*1:2*), சபை என்று பவுல் கூறுவது உள்ளூர் சபையையே குறிக்கின்றது. அதாவது, மூப்பர்களைக்கொண்டு, அங்கத்தவர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட வேதபூர்வமான சபை. இவ்வாறாக கொரிந்தி லிருந்த உள்ளூர் சபையில் சபை அங்கத்தவர்கள் திருவிருந்தில் கலந்து கொண்டபோது தவறான முறையில் நடந்து கொண்டு திருவிருந்தையும், கர்த்தரையும் அவமதித்தார்கள். அறிவீனத்தாலும், ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ச்சிக்குறைவாலும் அவர்கள் ஏன் திருவிருந்தெடுக்கிறோம் என்ற உணர்வே இல்லாத வகையில் நடந்து கொண் டார்கள். இதையே பவுல் கண்டித்துத் திருத்து கிறார்.

திருவிருந்து பற்றிப் பேச ஆரம்பிக்குமுன் பவுல் 11:17 இல் என்ன சொல்கிறார் என்று பார்ப்போம். "நீங்கள்கூடிவருதல் நன்மைக்கேதுவாயிராமல் தீமைக்கேதுவாயிருக்கிறது" என்று அவர் கூறுவதைப் பார்க்கிறோம். இதற்குப் பொரு ளென்ன? அதாவது, நீங்கள் உள்ளூர் சபையாக, கர்த்தரின் வார்த்தையின்படி, அதிகாரபூர்வமாக, உங்களுடைய போதகர்களால் வழிநடத்தப்பட்டு கூடி வரும்போது, அத்தகைய கூடிவருதல் நன்மைக்கேதுவானதாக இல்லாமலிருக்கின்றது என்று இதற்குப் பொருள். ஏன் நன்மைக்கேது வானதாக இல்லாமலிருக்கின்றது? கொரிந்தியர்கள் அக்கூட்டங்களில் தேவ வார்த்தைக்கேற்றபடி முறையாக நடந்து கொள்ளவில்லை.

ஆகவே, பவுல் இங்கே சபை கூடிவருதல் என்று ஆரம்பித்து திருவிருந்து பற்றிய போதனைகளை மட்டும் தராமல், *14*ம் அதிகாரம் வரையிலுமான பகுதிகளில், சபை கூடிவரும்போது கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய வரங்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் (*12*வது அதிகாரம்), சபைக்கூட்டங்கள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் (*14*வது அதிகாரம்) என்றும் விபரமாகக் கூறுகிறார். ஆகவே, கொரிந்தியருக்கு எழுதப்பட்ட நிருபம் முழுவதுமே கொரிந்து சபைப்பிரச்சனைகளை ஆராய்ந்த போதும், *11:17-14:40* வரையிலுமான வேதபகுதிகள் மிக முக்கியமாக, கொரிந்தியர்கள் சபையாகக் கூடிவரும்போது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதையே வலியுறுத்திப் போதிக் கின்றன.

இதற்கு உதாரணமாக பின்வரும் வசனங்களை நாம் பார்க்கலாம். ***11:17*** - நீங்கள் கூடிவருதல், ***11:18*** - நீங்கள் சபையிலே கூடிவந்திருக்கும்போது, ***11:20*** - நீங்கள் ஓரிடத்தில் கூடிவரும்போது, ***11:33*** - நீங்கள் . . . கூடிவரும்போது, ***14:26*** - நீங்கள் கூடி வந்திருக் கிறபோது; ஆகிய வசனங்களைக் குறிப்பிடலாம். இவ்வசனங்கள் மிகத்தெளிவாக கொரிந்தியர்கள் சபையாகக் கூடிவரும்போது நிகழ்ந்த நிகழ்ச்சி களையே குறிக்கின்றன. இவற்றோடு பதினான்காம் அதிகாரத்தில் காணப்படும் பின்வரும் வசனங் களையும் சேர்த்துக் கொள்ளலாம் ***14:12, 14:23, 14:19, 14:26, 14:28, 14:34***. இவ்வசனங்கள் சபை என்று குறிப்படுவது கொரிந்து சபையையே. ஆகவே, **11** ஆம் அதிகாரத் தில் இருந்து **14** ஆம் அதிகாரம் வரை கொடுக்கப்பட்டுள்ள போதனைகள் அனைத்தும் உள்ளூர் சபையில் நிகழ்ந்த காரியங் களைப்பற்றியே விபரிப்பதோடு, அக்காரியங்கள் உள்ளூர் சபைகள் கூடிவரும்போது எவ்வாறு முறையாக வேதபூர்வமாக நிகழ வேண்டும் என்றும் தெரிவிக்கின்றன.

இவ்வாறாக, இவ்வதிகாரங்கள் சபை கூடி வருதலைப்பற்றித்தான் சொல்கின்றன என்று ஏன் இப்படி வற்புறுத்துகிறீர்கள்? என்று நீங்கள் கேட்கலாம். அதற்கான காரணங்களை நான் இப்போது உங்கள் முன்வைக்க விரும்புகிறேன்.

1. முதலாவதாக, ***11:17-14:40*** அதிகாரம் வரையிலும் கொடுக்கப்பட்டுள்ள போதனைகள் அதிகார பூர்வமாக சபைகூடி வரும்போது நிகழ்ந்த, நிகழ வேண்டிய காரியங்களைப்பற்றியது என்பதை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

2. இதை நாம் ஏன் தெளிவாகப்புரிந்துகொள்ள வேண்டுமென்றால், இப்பகுதிகளில் காணப்படும் திருவிருந்து, ஆவிக்குரிய வரங்களின் பயன்பாடு, மற்றும் **14** ஆம் அதிகாரம் தரும் சபைக்கூட்ட ஒழுங்குமுறை ஆகியவை பற்றிய போதனைகளை நாம் சபைகளில்தான் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமே தவிர ஏனோதானோவென்று நாம் நினைத்தவிதத்தில் எல்லா இடங்களிலும் பயன் படுத்திக் கொள்ளக்கூடாது.

3. உதாரணமாக திருவிருந்து பற்றிய போதனையை எடுத்துக் கொண்டால், ***11:17-34*** வரையுள்ள வசனங்கள் திருவிருந்தை சபையில், சபைகூடிவரும் போதுதான் கொடுக்க வேண்டும் என்று கூறியிருக் கிறது. அதாவது, திருவிருந்து கொடுப்பதற்கும் அதில் பங்கு கொள்வதற்கும் சபை அவசியம்.

அதை எவரும் தாம் நினைத்தவிதத்தில் எல்லா இடங்களிலும் கொடுக்க முடியாது. சபைகூடி வராமல் திருவிருந்து கொடுக்கக்கூடாது. திருவிருந்தை தனிநபர்கள் ஒன்றுகூடி சபைக்கு வெளியில் எடுப்பதோ, மூப்பர்கள் சபைக்கு வரமுடியாமல் வைத்தியசாலையில் இருக்கும் நபருக்கு தனிமையில் கொடுப்பதோ வேதத்திற்கு புறம்பான செயல். அதுமட்டுமல்லாமல், சபை அங்கத்தவராக இல்லாமல் திருவிருந்து எடுப்பதும் தவறு. ஏனெனில் பவுலின் நிருபம் கொரிந்து சபையைச் சார்ந்த மக்களுக்கும், உலகிலுள்ள அத்தனை சபை மக்களுக்குமே எழுதப்பட்டது. உள்ளூர் சபையில் இணைந்து வாழாதவர்கள் கோயில் விருந்துக்கு மட்டும் போய் வயிறார சாப்பிட்டு வருவதைப்போல் திருவிருந்தில் மட்டும் கலந்து கொள்வது முறையல்ல. திருவிருந்து மட்டும் வேண்டும், மற்றவை தேவையில்லை என்று கர்த்தரிடம் கூற நாம் யார்?

3. **12-14** அதிகாரங்களில் கொடுக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய வரங்களில் அநேகமானவை வெளி படுத்தலோடு தொடர்புடைய வரங்களாக இருப்ப தோடு, அவற்றை சபைகூடிவரும்போது, பயன் படுத்த வேண்டும் என்று பவுல் போதிப்பதைப் பார்க்கிறோம். கொரிந்தியர்களில் பிரச்சனையே இவ்வரங்களை அவர்கள் தாம் நினைத்தவிதத்தில் சுயநலத்தோடு பயன்படுத்திக்கொண்டதுதான். இதன் மூலம் நாம் அறிந்து கொள்வது என்ன வென்றால் இவ்வரங்களை நாம் நினைத்தபடி, எல்லா இடங்களிலும், எல்லாக்காரியங்களுக்காக வும் பயன்படுத்திக் கொள்ள முடியாது என்பது தான். சபை இல்லாவிட்டால் இவ்வரங்களால் எந்தவிதப் பயனுமில்லை. இன்று கெரிஸ்மெடிக் குழுக்கள் ஆவி சொன்னார் என்று கூறி ஆவிக் குரிய வரங்களை என்னென்னவோவாகவெல்லாம், எங்கெங்கோ பயன்படுத்த முனைவது நாம் அறிந்த உண்மை. இது வெறும் அறிவீனம்.

4. ஆவிக்குரிய வரங்களில் வெளிப்படுத்தலோடு தொடர்புடைய வரங்கள் அனைத்தும் சபை கூடி வரும்போது சபை மக்களின் பயனுக்காகவே பயன் படுத்தப்பட வேண்டுமென்று பவுல் போதிக்கிறார். ஆகவே, அவ்வரமுடையவர்கள் வேதத்திற்கு கட்டுப்பட்டு, சபைக்குக் கட்டுப்பட்டு, சபையாரின் நன்மைக்காக அவற்றைப் பயன்படுத்த வேண்டும். நாம் நினைத்தவிதத்தில் ஊழியம் செய்கிறேன் என்ற கூறி ஊரெல்லாம் பயன்படுத்த முடியாது. இன்று தம்மைத்தாமே ஊழியக்காரராக நியமித் துக்கொண்டு, ஆவியானவர் வரமளித்திருக்கிறார் என்று கூறி, சாமியார்களைப்போல் ஊர் ஊராக சேவை செய்யப் புறப்பட்டுள்ளவர்கள் வேதத்தை வாசிப்பதில்லை. இவ்விதமாக பயன்படுத்தும்படி எந்த வரமும் கொடுக்கப்படவில்லை.

5. **14** ஆவது அதிகாரத்தில் பவுல் சபைகூடிவரும் போது (ஆராதனைக்காக) அங்கே முறையாக நடக்க வேண்டிய காரியங்களைப்பற்றிப் போதிக் கிறார். இன்று அநேகர் இதைப்புரிந்து கொள்ளா மல் இப்பகுதிக்கு விளக்கம் கொடுக்க முற்படு கிறார்கள். நமது குடும்ப ஆராதனை பற்றியோ, தனி ஜெப நேரம் பற்றியோ, ஆவிக்குரிய நண்பர் களுடன் கூடிவரும்போது நடந்து கொள்ள வேண்டிய முறைகள் பற்றியோ இப்பகுதி விளக்க மளிக்கவில்லை. கர்த்தரின் பெயரில் சபை அதிகார பூர்வமாகக்கூடிவரும் போது நடக்க வேண்டிய காரியங்களைப்பற்றியே இப்பகுதி போதிக்கிறது. அத்தோடு, அத்தகைய சபைக் கூட்டங்களில் ஆராதனை எப்படி நடக்க வேண்டும், அங்கு ஆண் களின் பங்கு என்ன, பெண்களின் பங்கு என்ன என்றும் இவ்வதிகாரம் விளக்குகிறது. அநேகர் இதைப்புரிந்து கொள்ளாமல் சபை ஆராதனையை ஒழுங்கற்ற முறையில் நடத்திக் கொண்டிருக்கி றார்கள். கெரிஸ்மெட்டிக் சபைகளின் ஆராதனைக் கும் இப்பகுதியில் தரப்பட்டுள்ள போதனைக்கும் எந்தவித சம்பந்தமுமில்லை. அதுமட்டுமில்லாமல் "பிலிமத்திஸத்தைப்" பின்பற்றுபவர்கள் சபை ஆராதனைக்கூட்டங்களில் எல்லோரையும் பேச விட்டு இவ்வேதப்பகுதிக்கு தவறான விளக்கமளிக் கிறார்கள். சபைக்கூட்டங் களில் எல்லோரும் பேச வேண்டும் என்று பவுல் இப்பகுதியில் கூறவில்லை. இரண்டு பேர் அல்லது மிஞ்சினால் மூன்று பேர் என்று சொல்லி எல்லோரும் பேசுவதற்குத் தடை விதிக்கிறார். அப்படிப் பேசுபவர் பெண்ணாக இருக்கக்கூடாது என்றும் கூறுகிறார். பெண்கள் சபைகளில் பேசுவது மட்டுமல்ல, இன்று ஆடுவதும், பாடுவதும்கூட வழக்கமாகிவிட்டது.

ஆகவே, இத்தகைய முக்கியமான காரணங்களுக் காகத்தான் இப்பகுதி போதிக்கும் "சபை கூடிவருதலின்" முக்கியத்துவத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்று கூறுகிறேன். இந்த அடிப்படையில் பார்க்கும்போது மட்டுமே பவுலின் போதனைகளின் முழு அர்த்தத்தையும் புரிந்து கொள்ள முடியும். தனிநபர் துதிபாடும் இக்காலத் தில் சபைகூடி வருதலின் முக்கியத்துவம் பலரின் கண்களுக்குத் தெரியாமல் போவதில் வியப்பில்லை. இனிவரும் இதழ்களில், இவ்வதிகாரங்களை மேலும் விளக்கமாகப் பார்ப்போம்.

**நமது வாசகர்களிடம் இருந்து பத்திரிகை பற்றி அறிந்து கொள்ளும், இந்தியாவின் ஏனைய மாகானங்களில் இருக்கும், தமிழ் மொழி தெரியாத அநேகர் பத்திரிகையின் ஆங்கிலப் பிரதியைக் கேட்டு எழுதுகிறார் கள். பத்திரிகை தமிழில் மட்டுமே வெளிவருகிறது. வாசகர்கள் உங்களுடைய நண்பர்களுக்கு தயவு செய்து இதைத் தெரியப் படுத்துங்கள்.**

# எண்ணங்கள் !

திருமறைத்தீபம் காலாண்டுப் பத்திரிகையைப்பற்றி நண்பர் ஒருவர் மூலம் கேள்விப்பட்டு, சென்ற இதழையும் பெற்று வாசித்தேன். இந்த இதழ்கள் இவ்வளவு நாட்களாக எனக்குக் கிடைக்கவில்லையே என்று வருந்தினேன். வேதத்தை ஆணித்தரமாகவும், தைரியமாகவும், போதித்து, போலியான போதனைகளை எதிர்த்து, வேத அடிப்படையில் தமிழில் வெளிவரும் ஒரே பத்திரிகை திருமறைத்தீபம் மட்டுமே என்று கூறுவேன். வேத்தை நல்ல முறையில் கற்றுக்கொள்ள விரும்பிகிறேன். எனதுமுகவரிக்கு இதழை அனுப்பி உதவுங்கள்.

*ஏ. இயேசுதாசன், தமிழ்நாடு*

நான் ஒரு வாலிபன். ஸ்பர்ஜன், ஜோன் கல்வின், வில்லியம் கேரி இவர்களைப்பற்றி இதுவரை நான் கேள்விப்படாதிருந்தேன். நீங்கள் வெளியிடும் பத்திரிகை மூலம் இவர்களைப்பற்றி நான் அறிந்து கொண்டேன். அத்தோடு வேத இரகசியங்களையும் கூடுதலாகத் தெரிந்து கொண்டேன். எனக்கும் என்னைச்சுற்றி இருக் கிறவர்களுக்கும் பத்திரிகை மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது. தயவு செய்து பத்திரிகையை தொடர்ந்து அனுப்பி உதவுங்கள்.

*சகோ. வின்ஸன்ட், தமிழ்நாடு*

கோயில் பூசாரியாகவும், மந்திரவாதியாகவும், இந்து பக்கதனாகவும் இருந்து வந்த என்னை ஆறு வருடங் களுக்கு முன் கர்த்தர் சந்தித்து கரை சேர்த்தார். ஞானஸ்நானம் பெற்று, வேதாகமக் கல்லூரிப் படிப்பை முடிதிதுவிட்டு இப்போது குடும்பத்தோடு சபை ஊழியத்தில் ஈடுபட்டிருக்கிறேன். நண்பர் ஒருவர் மூலம் உங்கள் பத்திரிகையை பெற்றுப் படித்தேன். எனது வாழ்க்கைக்கும் ஊழியத் திற்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது. ஆகவே, தயவு செய்து தவறாது பத்திரிகையை என்து முகவரிக்கு அனுப்புங்கள்.


*பாஸ்டர். பீட்டர் பிரகாசம், தமிழ்நாடு*

திருமறையை திறமையாக விளங்கப்படுத்தப் பயன்படுத்துகிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். போலியானவர்கள் நிரம்பி வழிகின்ற இக்காலத்தில் திருமறையை சரியாகப் போதிக்கிற வர்கள் வெகுசிலரே. அதிலும் இலக் கணத்தோடுகூடிய தமிழில் போதிப்பவர்கள் மிக அரிது. இவை எல்லா வற்றிலும் சிறப்பாக திருமறைத்தீபத்தின் ஆசிரியரான தாங்கள் செய் யும் பணி காலத்தின் தேவையானது. இவ்வரிய பணியை வரவேற்கி றேன், கர்த்தருக்குள் மகிழ்கிறேன். ஒவ்வொரு கிறிஸ்தவரையும் பத்திரிகை சென்றடைய வேண்டும் என்பதே என் அவா. ஊழியத்திற்கு செல்லும் வழியில் பத்திரிகையை தற்செயலாக ஒருவரிடம் பெற்று வாசிக்க முடிந்தது. எனக்கும் பத்திரிகையை அனுப்பி உதவி செய்யுங் கள். முன்னைய இதழ்களையும் அனுப்புங்கள்.

*சகோ. துரைராஜ் ரஞ்சித் விக்டர், ஸ்ரீ லங்கா*

தற்செயலாக நண்பர் ஒருவர் மூலம் பத்திரிகையைப் பெற்று வாசிக்க முடிந்தது. ஆவிக்குரிய வாழ்க்கை க்கு மிகவும் உதவியாக இருந்தது. பத்திரிகையை தொடர்ந்து வாசிக்க விரும்புகிறேன். எங்கள் சபையி லுள்ள அநேக வாலிபர்களும் தீபத்தைப்படிக்க ஆர்வத்துடன் காத்திருக்கிறார்கள். தயவு செய்து சில பிரதிகளை அனுப்பி உதவுங்கள். எனக்கும் சபையாருக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

*டேவிட்சன் போல், தமிழ்நாடு*



## உள்ளே . !


1. கிறிஸ்தவன் யார்?
2. ஜோன் பனியன்
3. பரிசுத்த வேதாகமம்
4. வில்லியம் கேரி
5. 1 கொரி. 12-14
6. எண்ணங்கள் !